விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி 18 | புதன்கிழமை (03.08.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 227

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து





மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ்த்தேசிய எழுச்சிப்பிரகடன மாநாட்டில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்களையும், மக்களையும் படத்தில் காணலாம்.

## தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு அங்கீகாரம்

# மீன்பாடும் தேன்நாட்டில் மாநாடு

# அலை கடலென மக்கள் கூட்டம்

## வண.சுமனதேரரும் ஆதரவு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பில் நேற்று நடந்த தமிழ்த்தேசிய எழுச்சிப் பேரணியிலும், மாநாட்டிலும் கலந்து கொண்டவர்கள் தமிழ்த்தேசிய எழுச்சிப்பிரகடனத்திற்கு தமது ஏகோபித்த ஆதரவையும் வழங்கினர்.**

தமிழ்த்தேசிய எழுச்சிப்பேரவையின் வவுனியா எழுச்சி மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த்தேசிய எழுச்சிப்பிரகடனத்திற்கு சர்வ தேச சமுகத்தின் அங்கீகாரத்தை கோரி நேற்று மாலை மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற எழுச்சிப் பேரணியில் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பெண்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டார்கள்.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் மட்டக்களப்பு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பேரணிக்கு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமை வகித்தார்.

தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டில் மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதிபதி வண.தம்பிட்டிய சுமனதேரோவும் கலந்துகொண்டு தனது ஆதரவை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். (12ஆம் பக்கம் பார்க்க)

## மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் மைதானம் அருகில் குண்டு வெடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்திற்கு அருகாமையில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டொன்று வெடித்தது.

தமிழ்த்தேசிய எழுச்சிப்பிரகடனத்திற்கு சர்வதேச சமுகத்தின் அங்கீகாரத்தினைக் கோரி நேற்று மாலை குறிப்பிட்ட மைதானத்தில் எழுச்சி மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாடு ஆரம்பமாவதற்கு சுமார் ஒரு மணிநேரத்திற்கு முன்னதாக இக்குண்டு வெடித்ததாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மாநாடு நடைபெற இருந்த மைதானத்திற்கு அண்மையில் குண்டு வெடித்தபோதிலும் மக்கள் பதற்றம் இன்றி மாநாட்டில் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

## தமிழ்ச்செல்வனை ஹெல்கீசன் சந்திப்பார்

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணியளவில் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் இச்சந்திப்பு இடம் பெறவுள்ளது.

இச் சந்திப்பில் யுத்த நிறுத்த உடன்பாடு, தேக்க நிலையிலுள்ள அமைதி முயற்சிகளின் தற்போதைய நிலைபரம் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்படலாமென தெரிவிக்கப்படுகின்றது. (ந-4)

## முத்தலிப்பின் கொலையில் சிங்கள உளவாளிகள்!

இராணுவப்புலனாய்வுப் பிரிவின் முதலாவது கட்டளை அதிகாரி லெப்.கேணல் முத்தலிப் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் இரகசியப் பொலிஸார் விடுதலைப்புலிகளுக்கு உதவி புரிந்த சிங்கள உளவாளிகளின் பெயர்களைக் கண்டுபிடித்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

முத்தலிப் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலிலுள்ள ஊடகவியலாளர் சிஞ்சீவ் உட்பட சிங்கள மற்றும் தமிழ் சந்தேக நபர்களிடம் மீண்டும் விசாரணைகளை மேற்கொண்டுள்ள போதே விபரங்கள் வெளி (12ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. தனித்து போட்டியிடுமா?

### கட்சியின் மத்திய குழு கூடி முடிவெடுக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது பொதுவான கூட்டணியை ஆதரிப்பதா என்பது தொடர்பான தனது முடிவினை ஜே.வி.பி. இம்மாதத்திற்குள் அறிவிக்கவுள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பிரிவினை தொடர்பாக இடைப்பட்ட நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்குமாயின் பொதுவான கூட்டணிக்கு ஆதரவளிக்கக் கூடாதென ஜே.வி.பியின் அரசியல் பீடத்திற்குஏற்கனவே யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று ஒரு சாராரும் பொதுவான கூட்டணிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று இன்னோர் சாராரும் யோசனைகளை முன்வைத்துள்ளனர். இவ்யோசனை தொடர்பில் ஜே.வி.பியின் அரசியல் பீடம்கூடி முடிவெடுக்கவுள்ளதுடன் இது தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் பொறுப்பை மத்திய குழுவிடம் ஒப்படைப்பது என்றும் முடிவாகியுள்ளது. (ந-4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..



# தமிழீழ விளையாட்டுத்துறையை உருவாக்கியவர் தேசியத் தலைவரே!

## மாவட்ட விளையாட்டு விழாவில் பாப்பா

(கொழும்பு)

தமிழீழ தேசியத் தலைவர் தமிழர் தாயகத்தில் விளையாட்டுத்துறையினை வளர்த்தெடுப்பதற்காகவே தமிழீழ விளையாட்டுத்துறையினை உருவாக்கினார் என தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட விளையாடு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

போர் இடம்பெற்ற காலங்களில் விளையாட்டுத்துறையினை வளர்த்தெடுக்க முடியாத சூழல் இருந்தது.

தற்காலிகமாக ஏற்பட்ட அமைதிச்சூழலில் தமிழர் தாயகத்தில் விளையாட்டுத்துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குக் கூட தமிழர் தாயகத்தில் இருந்து விளையாட்டு வீரர்கள் சென்று விளையாடி வெற்றிகளை ஈட்டி வருகின்றனர்.

நாம் விளையாட்டில் மட்டும் அக்கறை காட்டிவிட்டு இருந்து விட முடியாது. தமிழ்த்தேசியத்தை பலப்படுத்தி தமிழர்களுக்கென்று ஒரு நாட்டினை உருவாக்கி அந்நாட்டுக் கொடியுடன் சர்வதேச போட்டிகளில் தமிழர் தாயக வீரர்கள் போட்டிகளில் பங்குகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முதன்மைச் சுடரேற்றலைத் தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் பத்மநாதன் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவீட்டக்கொடி, பிரதேச கொடிகள் ஏற்றப்பட்டன. தொடர்ந்து போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளின் நிறைவில் கிளிநெச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது. (து)

## மிருதங்க அரங்கேற்றம்

(பருத்தித்துறை)

கலாவித்தகர் பரமசாமி கிருபாகரனின் மாணவனான செல்வக்குமார் ஜதீசனின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 6 ஆம திகதி நல்லை ஆதீன கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர் புலோலியைச் சேர்ந்த தற்போது இங்கிலாந்தில் வசிககும் கலாநிதி செ.செல்வக்குமார் தம்பதிகளின் புதல்வராவார்.

இந் நிகழ்வில், கலாசூடாமணி எஸ்.சண்முகராகவன் பாடவுள்ளார். (அ-52)

## ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு?

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடு அடுதத 3 வாரங்களுக்குள் அறிவிக்கப்படும் எனத் தெரிகிறது.

இத் தேர்தல் தொடர்பாக அனுசரிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி அந்தக் கட்சியின் மாவட்ட மட்டக் குழுக்கள் அடங்கலான அமைப்புக்களிலிருந்து கருத்துக்களும ஆலோசனைகளும் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றை அரசியல்குழு கூடி ஆராய்ந்த பின்னர் மத்திய குழு இறுதித் 'தீர்மானத்தை எடுக்கும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## மக்கள் சக்திப் போராட்டத்தில் குதிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாடுகள் பூர்த்தி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டாவது மக்கள் சக்தி எழுச்சிப் பேரணிக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் திஸஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எப்போது எங்கே நடாத்துவது என்பது குறித்து இன்னமும் முடிவுகள் மேற்கொள்ளப்படவில்லை என அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலை இவ்வாண்டிற்குள் நடாத்துமாறு வலியுறுத்தியும், வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை உட்பட மக்களுடைய பிரச்சினைகளுககுத் தீர்வுகாணுமாறு கோரியும் கையெழுத்துக்களை சேகரிக்கும் போராட்டங்களையும் தமது கட்சி விரைவில் ஆரம்பிக்குமீ எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தவர்களை இனங்கண்டு அவர்களின் ஆதரவைப் பெறும் நடவடிக்கைகளாலும் கட்சித் தொண்டர்கள் மூலம் கட்சிக்கான ஆதரவு அதிகரிக்குமென அவர் கூறினார். (ச)

சுனாமி ஒருங்கிணைப்பு முகாமைத்துவக் கட்டமைப்பு

## இடைக்காலத் தடைக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் மனு

(கொழும்பு)

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் முகாமைத்துவக் கட்டமைப்பின் ஒரு சில சரத்துக்களை அமுல்செய்வதற்கு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிவாரண புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க இதனைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த இடைக்காலத் தடை உத்தரவின் காரணமாக முகாமைத்துவக் கட்டமைப்பைச் செயற்றிறன் வாய்ந்த முறையில் அமுல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் பாரிய இழப்பு ஏற்படுவதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்குக் கிடைக்கும் சுனாமி நிவாரண உதவிகளைச் சீராகப் பகிர்ந்தளித்து வடக்கு - கிழக்கில் புனர்நிர்மாணப் பணிகள் விரைவாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காகவே அரசாங்கம் இந்தக் கட்டமைப்பை ஏற்படுத்த இணங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (து-2)

## இராசி பலன்

03.08.2005
(ஆடி 18, புதன்கிழமை)
சதுர்த்தசி முழுவதும்
புனர்பூசம் பின்னிரவு 2.52 மணிவரை
இராகுகாலம் 12.04 - 1.34 மணிவரை
சுபநேரம் 4.34 -6.04 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | நினைத்த காரியம் கைகூடும், அந்நியர் சந்திப்பு, கூட்டுமுயற்சி, பொருள் சேர்க்கை. |
| இடபம் | காரிய சிந்தை, தனவிரயம், போசன சுகக் குறைவு, கோபப்படுதல். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, இடமாற்றம், போசன சுகம், தெய்வசிந்தை. |
| கடகம் | வாக்குமேன்மை, இடமாற்றம், சுபசெலவு, சயனசுகக்குறைவு. |
| சிங்கம் | பெருமையடைதல், குடும்பசுகம், காரிய அனுகூலம், எதிர்பாராத நன்மை. |
| கன்னி | பிறருக்கு உதவுதல், தொழில் ஆர்வம், தர்மம், மேன்மை. |
| துலாம் | சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு, புதியதிட்டமிடல், பிரயாணம். |
| விருச்சிகம் | உடல் நலக்குறைவு, திருடர் பயம், வீண் பயம், போசன சுகம். |
| தனுசு | பிரயாண நன்மை, உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம், கலஸ்திர நன்மை. |
| மகரம் | சகோதரர் உதவி, தொழில் முயற்சி, புதிய தகவல், சத்துருஜெயம். |
| கும்பம் | முயற்சி தாமதம், உடல் நலக்குறைவு, வியாபார சிந்தை, போசன சுகம். |
| மீனம் | மாதர் நட்பு, மனப் பதட்டம், உஷ்ண நிலை, காரியதாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

## பேருவலைக்கு ஜேர்மன் அரசு 14 இலட்சம் ரூபா உதவி

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டு அரசாங்கங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் பலதரப்பட்ட நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன. பேருவல மருதானைப் பகுதியில் மென்கின்ஸ் சிக் பாலர் பாடசாலைக் கட்டடத்திற்கென 4 இலட்சம் ரூபா நிதி உதவியையும், கால்வாய் அமைப்புத் திட்டத்திற்கென 10 இலட்சம் ரூபாவையும் ஜேர்மன் அரசாங்கம் வழங்கியுள்ளது.

இவற்றின் திறப்பு விழா நடவடிக்கைகள் பேருவல நகர பிதா மஷகி மொகமட் தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது. அங்கு ஜேர்மன் மாவட்ட அமைச்சர் கார்.ஏ.கௌபர் உரைநிகழ்த்துகையில் "இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான நீண்டகால நல்லுறவு என்றென்றும் நீடித்து நிலைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (து-7)

## இந்த ஆண்டு டெங்கு நோயின் தாக்கம் குறைவு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கான திட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் நுளம்பு வலைகள் விநியோகிக்கப்படுகின்றன.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்பும் பிரிவின் நிபுணர் தகவல் தருகையில் இந்தத் திட்டம் தொடர்பாகவும், தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளதா? என்பது பற்றியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் டாக்டர்களும் விழிப்பாக இருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுக்கக் கூடிய வழிமுறைகளைக் கையாளுமாறு பொதுமக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, தற்போதைய மழை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம் இருப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு டெங்கு நோயின் தாக்கத்திற்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (து-2)

## ஞானச்சுடர் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினரின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆடி மாத இதழ் வெளிவந்துள்ளது. (அ-2)

## இறைவரித் திணைக்கள ஊழியர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஊழியர்கள் கொழும்பில் திணைக்களத்திற்கு முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

திணைக்களத்தை மறுசீரமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதாக உள்நாட்டு இறைவரி சேவையாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் எம்.எ.எல்.உதயசிறி தெரிவித்துள்ளார்.

திணைக்களத்தின் நிர்வாகம் முகாமைத்துவம் செயல்திறன் என்பனவற்றை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த மறுசீரமைப்புத் திட்டம் வெற்றியளிக்காத ஒன்று என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் நிதியமைச்சின் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களான ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், அவர்களின் பிரசசினைகளை தீர்த்தல் என்பன இந்த மறுசீரமைப்பு நடவடிக்கையின் கீழ் நீக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நிதியமைச்சரவையும், அமைச்சின் உயர் அதிகாரிகளையும் தொடர்பு கொள்ள முயற்சித்த போது அது கைகூடவில்லை என மேலும் தெரிவித்தார். (து-9)

## நல்ல பாம்பை முத்தமிட்டவர் நமனுலகு எய்தினார்

(மாத்தளை)

மதுபோதையில் நல்ல பாம்பு ஒன்றைவாரி அணைத்து முத்தம் கொடுத்த நபரைப் பாம்பு பல முறை தீண்டியதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் பரிதாபமாக மரணமடைந்த சம்பவமொன்று மாத்தளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, ஹரஸ்கம கிராம பிரதேசத்தில் இந்நபர் பாடசாலை அருகே சென்றுகொண்டிருநத போது பாடசாலை மாணவர்கள் சிலர் நல்ல பாம்பு ஒன்றினை கற்களாலும் தடிகளாலும் தாக்குவதை அவதானித்தார்.

மதுபோதையில் இருந்த இந்த நபர் பிராணிகளைச் சித்திரவதை செய்யக்கூடாது என அம் மாணவர்களை எச்சரித்துவிட்டு காயமடைந்திருந்த நல்ல பாம்பைக கையால் பிடித்து அணைத்த போது பாம்பு முதலில் நபரின் கழுத்தில் கொத்தியது.

பாம்பு கொத்தியதைப் பொருட்படுத்தாத அந்நபர் பாம்பைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டு மேலும் எனக்கு முத்தம் தா என பாம்பிற்கு முத்தம் கொடுக்க எத்தனித்த போது பாம்பு அவரைப் பலமுறை கொத்தியுள்ளது.

நபரின் முகத்தில் பாம்பு பல முறை கொத்திய போதும் அதனைப் பொருட்படுத்தாத நபர் தம் வீட்டிற்குச் சென்று அட்டைப் பெட்டி ஒன்றினை எடுத்து 'வாடா என் கண்ணு' எனக் கூறி பாம்மை பெட்டிக்குள் வைத்து மூடியுள்ளார்.

இதனை அவதானித்த வீட்டிலுள்ளவர்கள் இந்நபரை உடனடியாக முச்சக்கர வண்டி ஒன்றில் ஏற்றி மாத்தளை வைத்தியசாலைககுக் கொண்டு சென்றுள்ளனர்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளித்த போதும் பயனளிக்காத நிலையில் அந்நபர் மரணமடைந்துள்ளார். (து-2)

# மாணவர் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் உயர்ந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும்

## யாழ்.மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவில் ரெலிகொம் வடமாகாண பி.பொ.முகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களிற்கு செல்வதில் ஆர்வம் காட்டுவதைப் போன்று பாட சம்பந்தமான நூல்களை வாசித்து தகவல்களைப் பெறுவதன் மூலமும் பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரியின் நிறுவுனர் தின நிகழ்வும், பரிசளிப்புவிழா நிகழ்வும் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற வேளை அந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் வி.நா.யோகேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் தான் கல்விகற்கும் போது எந்த ஒரு தனியார் நிறுவனங்களிற்கும் செல்லாது தனது பாட சம்மந்தமான பாடப்புத்தகங்களை நூலகங்களிங்குச் சென்று நன்றாக பலமுறை திருப்பி திருப்பி வாசித்து பாட அறிவைப் பெற்றதன் மூலமே 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் A சித்தியைப் பெறமுடிந்துள்ளதாகத் தெரிவித்தார்.

நான் நான்காம், ஐந்தாம் ஆண்டில் இருந்தே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தினேன். இவ் வாசிப்பு பழக்கம் தான் எனக்கு உந்துசக்தியாக இருந்து கூடவே வழிகாட்டியது. ஆனால் இன்று மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிகவும் குறைந்த நிலையிலே காணப்படுவதோடு அவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களிற்கு செல்வதிலேயே ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவித்தார்.

மேலும், அவர் கருத்துத் தெரிவிக்கையில் தான் பாடசாலையில் கல்விகற்கும் போது பழகிக்கொண்ட உயர்ந்த பண்புகளே இன்று உயர்ந்த பதவியில் கடமையாற்றும் போது நூற்றுக்கு நூறு வீதம் உதவியாக இருக்கின்றது எனவும் இதனால் மாணவர்கள் அனைவரும் பாடசாலையில கல்விகற்கும் போது உயரிய நல்ல பண்புகளைக் கற்றுக் கொண்டால் அது பின்னர் கடமைகசு சென்று இருக்கும் போது ஒவ்வொருவருக்கும் உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்தார். (அ-19)

# பாந்தியாதோட்டத்தில் தொடர்ந்து பதற்றம் மலையகத் தலைமை மௌனம் எனப்புகார்

பாந்தியா தோட்டத்தில் தொடர்ந்து பதற்றம். மத்துகம பாந்தியா தோட்ட மக்கள் தொடர்ந்தும் மிகுந்த பதற்றத்துக்கு மத்தியிலேயே காணப்படுகின்றனர். சிங்கள பௌத்த பேரினவாதக்குழுவினரின் அச்சுறுத்தல்கள் காரணமாக தோட்டத்திலிருந்தும் சுதந்திரமாக வெளியே சென்று தமது தேவைகளை நிறைவேற்ற முடியாதவர்களாகவுள்ளனர்.

இதன் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டோ, இன்றேல் இதர தேவைகளின் பொருட்டோ பொலிஸாரின் உதவியை நாடவேண்டியுள்ளது. சிங்கள பௌத்த பேரினவாதக்குழுவினரின் தாக்குதல் தம்மீது என்நேரமும் தொடுக்கப்படலாம் என்று மக்கள் அஞ்சுவதுடன், சுதந்திரமாக நடமாடவும் தயக்கம் காட்டுகின்றனர். மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து தோடடத்தில் 50க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போதும், எந்தவிதமான பாது காப்பு உத்தரவாதமும் கிடையாத நிலையில் தோட்டப் மக்கள் வாழ்கிறார்கள்.

தோட்டப்பெண்கள் தனிமையில் வெளியே சென்று வர முடியாத நிலையில், இத்தோட்டத்தில் அநேகமான பெற்றோர் தமது பெண் பிள்ளைகளை வெளியிடங்களிலுள்ள தமது உறவினரின் இல்லங்களில் தங்க வைத்துள்ளனர். இத்தகைய அவல நிலை தொடர்ந்து வருகின்ற போதிலும், பொலிஸாரோ மலையகத் தலைமைகளோ அது தொடர்பில் உரிய நடவடிககைகளை எடுத்ததாகத் தெரியவில்லை என அத் தோட்ட மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள். (து)

# நன்னீர் மீன்பிடித் தொழில் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்பொழுது நிலவும் வரட்சி காரணமாக நன்னீர் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதிகளிலுள்ள ஆறுகளிலும், குளங்களிலும் நீர்மட்டம் குறைந்துள்ளதால் நன்னீர் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் நன்னீர் மீன்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

குறைந்தளவு நீரில் வலைகளைப் பாவிக்கின்ற போது வாவியிலுள்ள கற்களிலும், கழிவுகளிலும் வலைகள் சிக்கி சேதமடைவதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் இதனால் நன்னீர் மீன்பிடியில் அக்கறை செலுத்துவோரின் வீதம் குறைவடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து-7)

# கடந்த 5ஆண்டுகளை விட இந்த ஆண்டு ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் அரையாண்டுக் காலப்பகுதியில் மொத்தக் கொடுப்பனவு நிலுவை 174 மில்லியன் டொலர்கள் மேலதிக தொகையைக் காட்டி நிற்கின்றது. என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுப் பரிமாற்று சந்தையின் ஸ்திரநிலையையே இது எடுத்துக்காட்டுகின்றது.

கடந்த யூன் மாதம் நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கீடுகள் 2ஆயிரத்து 372 மில்லியன் டொலர்களால் அதிகரித்துள்ளது என்றும் வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் வெளிநாட்டு ஒதுக்கீடுகள் 2 ஆயிரத்து 196 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

கடந்த மே மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி வருமானம் 2004 ஆம் ஆண்டு மே மாதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட 409 மில்லியன் டொலர்களுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் இநத ஆண்டே ஏற்றுமதி வருமானம் 11.4 சதவீததால் அதிகரித்துள் ளது எனினும் வருமானப் புரள்வு 17 சதவீதத்தால் உயர்ந்துள்ளது.

பாரம்பரிய ஏற்றுமதிகள் அதிகரித்ததன் காரணமாக ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-2)

# கிராமிய விவசாயத்துறையை மேம்படுத்த சமுர்த்தி அமைச்சு விசேட திட்டம்

(கொழும்பு)

சமுர்த்தி அமைச்சு கிராமிய விவசாயத் துறையை மேம்படுத்தும் விசேட திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது.

பொன்னான வியர்வையால் பெருக்கெடுத்தோடும் நீரோட்டம் என்ற பெயரைக் கொண்ட திட்டத்தை 21 மாவட்டங்களில் அமுல் செய்யப்போவதாக அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் 450 விவசாய அபிவிருத்தித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். இதற்கு 5கோடி 40 இலடசம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்தியை ஏற்படுததுவதோடு கிராமங்களில் வாழும் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்மூலம் சமுர்த்தி உதவி பெறும் 17 ஆயிரம் குடும்பங்களுக்கும் உதவிகளைப் பெறாத 18 ஆயிரம் குடும்பங்களுக்கும் நன்மை கிட்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கிராமவாசிகள் இனம்கண்ட திட்டங்கள் மாத்திரம் அமுல் செய்ய இருப்பதும் சிறப்பம்சமாகும். (அ-2)

# நிர்வாகிகள் தெரிவு

ஜே/108, நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும் 75/2 செட்டித் தெருவில் அமைந்துள்ள நலலூர் முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வரதராசாவின் மேற்பார்வையில் நடைபெற்றது. அதில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளின் விபரம் பின்வருமாறு,

தலைவர் - செ.பத்மகுமார், செயலாளர் - வை.சங்கரப்பிள்ளை, உபதலைவர் - ரி.ராஜா, பொருளாளர்-க.சற்குணானந்தன், உபசெயலாளர் - கே.பரம்சோதிநாதன், நிர்வாகசபை உறுப்பினர்கள் ம.பேரின்பநாதன், வே.பூபாலசிங்கம், க.கதிரமலைநாதன், ச.இராமநாதன், அ.ஜீவாஅமிர்தம், சு.குமாரசுவாமி, திருமதி கமலாசனதேவி தனக்குமார், செல்வி -தர்ரணி முருகையா போஷாகர் - க.குமாரசுவாமி கணக்காய்வாளர் -அ.கோபாலகிருஷ்ணன். (அ)

# ஜனாதிபதித் தெரிவுக்கு ம.கி. நாடுகள் பாராட்டு

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதபதி வேட்பாளராகத் தெரிவு செயயப்பட்டிருப்பதைப் பல நாடுகள் வரவேற்றிருக்கின்றன.

மத்திய கிழக்கு உள்ளிட்ட பல பிராந்தியங்களைச் சேர்ந்த நாடுகளின் இராஜதந்திரிகள் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் பிரதமரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார்கள்.

இதில் மலேஷ்யா, பாகிஸ்தான், எகிப்து, கட்டார், இந்தோனேஷியா, மாலைதீவுகள், குவைத், ஈரான், லிபியா, சவூதிஅரேபியா ஆகியவற்றின் இலங்கைக்கான தூதுவர்களும் இராஜதந்திரிகளும் அடங்குகிறார்கள்.

இவர்கள் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் எதிர்கால உறவுகளை வலுப்படுத்துவது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிகிறது.(து-2)

# வறுமை ஒழிப்புக்கு முன்னுரிமை வழங்கும் வரவு-செலவுத்திட்டம்

## தயாரிக்கப்படுவதாக நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட யோசனைகள் நாட்டில் துரித பொருளாதார அபவிருத்தியை ஏற்படுத்தி வறுமை ஒழிப்புக்கு முன்னுரிமை வழங்கும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டில் 6.8 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு அரசாங்கம் இலக்கை நிர்ணயித்துள்ளது.

சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.வி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்திற்கு மத்தியிலும் 5.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்ட முடிந்திருக்கிறது என்றும் அதனை 5.8 சதவீதமாக அதிகரிக்க முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தேசிய உற்பத்திகளை அதிகரிக்கும் கொள்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும், வரவு - செலவுத்திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாக பல தரப்புக்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

'சமகாலத்தில் நாட்டில் உற்பத்தித்துறை சார்ந்த வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருக்கிறது. விவசாய, கைத்தொழில் துறைகளில் வளர்ச்சிதென்படுகிறது. இந்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும் பின்னணியை அரசாங்கம் உருவாக்கியிருக்கிருக்கிறது.

அதன் பிரகாரம் பாடசாலைச் சீருடைகள், படையினருக்கான சீருடைகள் போன்றவற்றை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருநது விலை கொடுத்து வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-2)

## சாரதி அனுமதிப்பத்திரம்

# எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்களுக்கு வாய்மூலப் பரீட்சை - பொலிஸ் திணைக்களம் ஆராய்வு

(கொழும்பு)

நாட்டில் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் இல்லாது 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முச்சக்கர வண்டிச் சாரதிகள் உள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சாரதிகளைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி டி.சில்வா தெரிவித்துள்ளார்.

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத காரணத்தால் பலசாரதிகள் அனுமதிப்பத்திரம் பெறமுடியாத நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைக் கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட சாரதிகளுக்கான எழுத்துப் பரீட்சைக்குப் பதிலாக வாய்மூலப் பரீட்சைகள நடத்துவதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களம் இது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

இந்தப் புதிய நடவடிக்கையின் மூலம் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத சாரதிகளுக்கும் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் கிடைக்க வாய்ப்புக் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டில் சுமார் ஒரு இலட்சத்து 12 ஆயிரம் முச்சக்கர வண்டிகள நிலையான போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(அ-

## இன்று ஒரு தகவல்

# குழந்தைகள் கவனம்

ஒருவர் மிகவும் அவசரமாகப் போய்க் கொண்டிருந் தாா. “எங்கே சாா போகிறீர்கள்?'' என்று கேட்டேன். எனக்கு வேண்டப்பட்ட ஒருவருக்கு குழந்தை பிறந்திருப் பதாக அறிந்தேன். அதுதான் ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பாாக்கலாம் என்று போகிறேன்'' என்றார். “அப்படியென் றால் கொஞ்சநேரம் இப்படி உட்காருங்கள் சார்.சில விப ரங்களைக் கூறுகிறேன். கேட்டுக்கொண்டு போங்கள்'' என்றேன். உட்கார்ந்தார். சொல்லஆரம்பித்தேன்.

புதிதாகப் பிறந்திருக்கும் ஒரு குழந்தையைப் பார்க் கப் போவதென்றால் அது சாதாரண விடயமில்லை. அதில் மிகவும்கவனமாக நடந்து கொள்ள வேண்டும். புதிய குழந் தைக்கு நோய்கள் சுலபமாகத் தொற்றும். முக்கியமாக காற்றின் மூலம் பரவும் நோய்கள் சுலபமாக தொற்றும். அத னால் நமக்கு உடல் நிலை சரியில்லை என்றால் குழந் தையை விட்டு கொஞ்சம் தள்ளியிருப்பது நல்லது.

பெரியவர்களைப பொறுத்தவரை சாதாரணமாக உள்ள ஒரு கிருமி கூட குழந்தைக்கு மிகவும் மோசமான கிருமியாக இருககும். சில வெளிநாடுகளில் எப்படி தெரியுமா? பிறந்த குழநதை தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு அறைக்குப் போக வேண்டும் என்றால் போகிறவர்கள் முகமூடி போட்டுக் கொள்ள வேண்டும். காலணிகளை மாற்ற வேண்டும். அவ் வளவு சுத்தமாக உள்ளே போய் பார்த்துவிட்டு வரவேண்டும்.

பொதுவாக சில ஆஸ்பத்திரிகளில் பார்வையாளர்கள் நேரத்தில் தாயை விட்டுக்குழந்தையை தனியாகப் பிரித்து விடுவார்கள். எதற்கு தெரியுமா? அந்த நேரம் பலபேர் வரு வார்கள் போவார்கள். அவர்களின் கை,கால்கள் சுத்தமாக இருக்காது. சுத்தம் இல்லா கைகள் மூலம் கிருமிகள் பர வும். சுத்தம் இல்லாத கையென்றால் மண்,தூசு படிந்திருக் கும் கை மட்டும் தான் என்று அர்த்தமில்லை. சாலையில் கையை வீசிக் கொண்டு நடந்து வருகிறீர்கள். குழந்தை யைப் பொறுத்தவரையில் அது கூட சுத்தமில்லாத கைதான்.

தாயைத் தவிர மற்றவர்கள் குழந்தையை தூக்காமல் பார்த்துக்கொள்வது நல்லது. தாய்கூட அளவோடு கொஞ்ச வேண்டும். புதிதாக ஒரு குழந்தையை பிரசவித்திருக்கும் பெண்ணிடம் மற்றதாய்மார்கள் ஏதாவது சொல்லிக் கொண்டே யிருப்பர்கள். குழந்தையை அப்படி வளர்க்கவேண்டும் இப்படி வளாக்க வேண்டும் என்று ஏதாவது புத்திமதி சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இது அந்தப் பெண்ணைக் குழப்பி விட்டுவிடும். அதனால் அப்படியெல்லாம் செய்யக் கூடாது. அந்தப் பெண்ணே ஏதாவது கேட்டால் கூட மருத்துவர் கூற வேண்டிய விபரங்களையெல்லாம் நாமே சொல்லிக் கொண் டிருக்கக்கூடாது.

புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தையை மட்டுமல்ல... ஒரு நோயாளிகுழந்தையைப் பார்க்கப் போவதென்றால் கூட மிகுந்த எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும். ஒரு தின்பண்டமோ...விளையாட்டுச்சாமானோ அந்தக் குழந் தைக்கு நாம் வாங்கிக்கொண்டு செல்வதாக வைத்துக் கொள் வோம். அதை நேராகக் கொண்டுபோய் அந்தக் குழந்தையிடம் கொடுக்கக்கூடாது. அதன் பெற்றோரிடம் இரகசியமாகக் கொடுங் கள். அவர்கள் குழந்தையிடம் கொடுககலாமா... வேண்டாமா என்பதை முடிவு செய்யட்டும். அவர்களுக்குத் தான் தெரி யும் அதன் மனமும் உடம்பும்.

உங்கள் அக்கறையைக் காட்டுவதாக நினைத்துக் கொண்டு குழந்தையின் வாயில் எதையும் கொண்டு போய் போடாதீர்கள் போகும் போது உங்கள் வீட்டுக் குழந தையை அழைத்துச்செல்லாதீர்கள். இது நோயை வாங் கிககொண்டுவரும் அல்லது புதிதாக ஒரு நோயை அதனிடம கொடுத்துவிட்டு வரும்.

என்னதான் உங்களுக்கு பழக்கமான குழந்தையாக இருந்தாலும் கூட அதற்கு விருப்பம் இல்லாவிட்டால் பேசா தீர்கள். அங்கே போய் அதன் பாடசாலையைப் பற்றி ஞாப கப்படுத்தாதீர்கள். நோயில் இருக்கும் போது பாடசாலையைப பற்றி பேச விரும்பாது பிள்ளை. மருத்துவமனையை விட்டுபோகும போது பிள்ளையிடம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அதன் பெறறோரிடம் சொல்லிவிட்டுப் புறப்படுங்கள். நம்மி டம் சொல்லவில்லையே என்று பிள்ளை யோசிக்காது சமூக சம்பிர தாயத்தைப்பற்றி அது கவலைப்படுவதில்லை. இப்படி எல்லா விபரம் என் எதிரில் உட்கார்ந்திருந்தவரிடம் கூறி முடித்தேன. “மிக்க நன்றி சார்'' என்று கூறி விட்டு அவர் புறப்பட்டார். பிள்ளைகள் கொஞ்சம் வளரும் வரைக்கும் தான நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றில்லை. வளர்ந்த பின் இன்னும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும. ஒரு சிறு வன் பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்குத் திருமபி வநதான். முகம் முழுவதும் நகத்தால் கீறியிருந்தது. அப்பா பார்த் ததும் பயந்துவிட்டார். “உன்னை யார் இப்படிச் செய்தது?என்று கேட்டாா. எனனுடன் கூடப்படிக்கும் பையன்'' என்றான மகன்.

மகன் நாளைக்கு உன்னுடன் பள்ளிக்கூடம் வருகி றேன். நீ எனக்கு அவனை அடையாளம் காட்டுகிறாயா? என்றார் அப்பா. “அது மிகவும் சுலபம்” என்றான் மகன. “எப்படி?'' என்றார் அப்பா. ''அவனது காது ஒன்றை நான் கொண்டு வந்திருக்கி றேன்'' என்றான் மகன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எதனையும் சமாதான வழியில் பெற கவனமாகச் செயற்படும் தலைவர்

## தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கை அரசு திட்டமிட்ட முறையில் சமா தானத்தைக் குழப்பும் முயற்சியை எடுத்துள் ளது. இதன் மூலம் துன்பங்களை அனுபவிக் கப்போவது சிங்களத் தேசமேயன்றி தமிழ்



மக்கள் அல்ல.போர் என்று ஒன்று வருமாக இருந் தால் அதனை தலைவர் என்றும் சந்திக்கத்தயாரா கவே இருக்கின்றார்.

இவ்வாறு தமிழீழ விளையாட்டுத்துறை இணைப் பாளர் இன்பன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண துடுப்பாட்ட நடுவர் சங்கத்தின் ஒன்று கூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே இன்பன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது எதனையும் சமாதான வழியில் பெறவேண்டும் என்பதில் தலைவர் மிகவும் கவனமாக செயல் படுகின்றார். அதனை யாரும் பலவீனம் எனக் கருதக் கூடாது எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண துடுப்பாட்ட நடுவர் சங்கத்தின் ஒன்று கூடல் நிகழ்வு யாழ்ப்பாண இந்துக் கல் லூரி குமாரசாமி மண்டபத்தில் அதன் தலைவர் வேதாபரணம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை தமிழீழ விளையாட்டுத்துறையின் இணைப்பாளர் இன்பன், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப் பாளர் மாதுளன், யாழ்.மாவட்டபாடசாலைகள் துடுப் பாட்ட சங்கத்தலைவர் பொ.கமலநாதன், யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றொகான் ராஜசிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். (அ)

# இணக்கசபையால் தீர்வு காண முடியாத பிரச்சினைகளுக்கே நீதிமன்றம் செல்ல முடியும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் அனைத் துப் பிரதேசங்களிலும் மக்கள் மத்தியில் காணப் படும் சிறிய அளவிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை இணக்க சபை யிடம் கட்டாயமாக ஒப்படைப்பதற்கு நீதியமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது.

இணக்க சபையால் இவ்வாறான பிரச்சினைக ளுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு காண முடியாத பட்சத்தில் அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும் என்று அமைச்சு தெரிவிக்கின்றது.

எனினும் குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளுக் குத் தீர்வு காணப்படவில்லை என்று இணக்க சபைத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டமைக் கான பத்திரம் ஒன்று வழங்கப்பட்டபின்னரே அதனை நீதி மன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரமுடி யும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை களில் இணக்க சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப் பாடுகளில் 75 வீதமானவை தீர்வுகாணப்பட்டுள்ளதால் இணக்க சபை மீதான நம்பிக்கை மக்கள் மத்தியில் அதி கரித்து வருவதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வருடாந்தம் இணக்க சபைக் குச் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளில் சுமார் 4 ஆயிரம் முறைப்பாடுகள் வாபஸ் பெறப்படுவதாக வும் அதே போன்ற ஒரு எண்ணிக்கை நிராகரிக் கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

முறைப்பாட்டாளர்கள் சமூகமளிக்காததால் வரு டத்துக்கு சுமார் 10 ஆயிரம் முறைப்பாடுகள் நிரா கரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் 276 இணக்க சபைகள் இயங்கி வருவதாகவும் அவற்றில் சுமார் 5ஆயி ரத்து 400 பேர் கடமையாற்றி வருவதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# 1983 இல் விதைத்த வினையை அறுவடை செய்கிறது அரசு

## வீர முரசு நிகழ்வில் கனகரத்தினம் எம்.பி

(முல்லைத்தீவு)

சிங்கள மக்கள் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு போதும் எந்த விதமான உரிமைகளையும் வழங்கமாட்டார்கள் என்ற உண்மையை நாம் இன்றைக்கு அல்ல, என்றைக்கோ உணர்ந்து விட்டோம்.சமாதான காலத்தில் அரசாங்கம் எமக்கு எதிராக என்ன என்ன செய்ய முடியுமோ அவற் றையெல்லாம் செய்வதற்கு மறைமுகமான திட் டங்கள் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தண் டுவான் கிராமத்தில் நடைபெற்ற வீர முரசு மாதாந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வன்னிப் பாராளுமன்ற உறுப் பினர் சதாசிவம் கனகரத்தினம் இவ்வாறு தெரி வித்தார்.

இவ்விழாவிற்கு தண்டுவான் மகாவித்தியா லய அதிபர் ச. செல்வரத்தினம் தலைமை வகித் தார். சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ மகளிர் அரசியல் பொறுப்பாளர் செல்வி தமிழினி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கனகரத்தினம் எம்.பி.தொடர்ந்து பேசுகை யில் சிங்கள மக்களிடம் இருந்து எமது உரிமை களை வென்றெடுப்பதற்காக அன்று தந்தை செல்வா அகிம்சைப் முறையிலான போராட்டங் களை நடத்தியும் சிங்களத் தலைவர்களுடன் பல ஒப்பந்தங்களைச் செய்தும் ஈற்றில் பலத்த ஏமாற்றம் அடைந்ததன் விளைவே எமக்கு இனி சமஷ்டி வேண்டாம், முடிந்த முடிவு தனித்தமிழீ ழமே என்ற முடிவுக்கு வந்து 1972அம் ஆண்டு வட்டுக்கோட்டை மகாநாட்டில் தனித்தமிழ் நாடு என பிரகடனப்படுத்தினார்.

போராட்டம் மூலம் தமிழீழ விடுதலைப் புலி களை வெல்ல முடியாது என்பதை உணர்ந்ததா லேயே அரசாங்கம் புலிகளுடன் சமாதான ஒப்பந தம ஒன்றை செய்து பேச்சுவார்த்தை நடாத்த முன் வந்தது.

சமாதானம் என்ற போர்வையில் மூன்றரை வருடகாலத்தை வீணாக்கிவிட்டோம். இந்தச் சமாதான காலத்திலேயே நாம் பெறுமதி மிக்க பல போராளிகளை இழந்திருக்கிறோம்.

நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார் பாகவே தேர்தலில் போட்டியிட்டோம். 22 பாரா ளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ததன் மூலம் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள என்பதை மக்கள் சர்வதேசத்திற்கு உணர்த்தியுள்ளனர். நாம் சமாதானத்தின் எதி ரிகள் அல்லர். ஆயிரக்கணக்கான போராளிகளை இழந்தே இந்த விடுதலைப் போராட்டத்தை முன் னெடுத்து வந்துள்ளோம்.

இப்போராளிகளின் உன்னத இலட்சியம் ஒரு போதுமே வீண் போகமாட்டாது. எமது இலட் சியத்தை ஒருபோதும் கைவிடமாட்டோம். அரசாங கத்தின் பசப்பு வார்த்தைகளில் ஒரு போதும் ஏமாந்துவிடமாட்டோம்.

நாம் சுதந்திரமாக வாழவேண்டும். எமக்கென ஒரு அரசு வேண்டும்.எமக்கென ஓர்நிலம் வேண்டும் என பொதுமக்களே முன்வந்து கடந்த 27ஆம் திகதி எமது கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் அல்ல. இராணுவக்கட்டுப்பாட்டுப்பிரதேசமான வவுனியா வில் தனித்தமிழீழத்தை பிரகடனப்படுததியுள் ளார்கள்.

எமது இளைஞர்களின் போராட்ட வலுவை ஆரம்ப கட்டத்திலே தகர்த்துவிடலாம் என்ற நோக்குட னேயே 1983ஆம் ஆண்டு அன்றைய சிங்கள அர சின் அமைச்சர்களும் ஜே.ஆர் ஜெயவர்த்தனா வும் இனக்கலவரத்தைத்தூண்டி தமிழர்களை யெல்லாம் கொன்று குவித்து அவர்களின் சொத துக்களையெல்லாம் சூறையாடி கொழும்பை விட்டே விரட்டியடித்தார்கள்.சிறையிலே இருந்தவர்க்ளை யெல்லாம் சித்திரவதை செய்து கொலை செய் யதார்கள்.

ஆனால் நடந்தது என்ன? தங்களுக்கு ஏற் பட்ட அவமானத்தால் அரசாங்கம் வெட்கி தலை குனிநதது. வெளி உலகில அவமானத்தைத் தேடிக்கொண்டது. எமது போராட்டம் வலுப்படடு தேசியத்தலைவரின் கரங்கள் பலப்படுத்தப்பட் டதற்கு அன்றைய சம்பவஙகளே காரணமாகும் எனக் கூறினார்.

இவ்விழாவில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. தமிழீழ மகளிர் அரசியல் பொறுப்பாளர் செல்வி தமிழினி, ஒட்டி சுட்டான கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.ஜெய பாலன் உட்பட பலர் பேசினார்கள். (கு-128)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

44 குடமுழுக்குக் காணவிருந்த பெருங்கோயிலில் ஏற்பட்ட தீ விபத்துக்குறித்து பலரும் பலவாறாகப் பேசிக்கொண்டனர். அதில் பேசப்பட்ட ஓர் முக்கியமான விடயம் பற்றி இவ்விடத்தில் குறிப்பிடுவது அவசியமே.

இராஜகோபுரத்திலிருந்த தேன் கூட்டைத் தீயிட்டுக் கொளுத்திய போது எழுந்த தீச்சுவாலை தஞ்சை மாநகர் முழுவதுமே எரிவதுபோலக் காட்சிகொடுத்ததாகப் பேசப்பெருங்கோயிலின் இராஜகோபுரத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டதாக அவர் தெரிவித்த கருத்தால், தஞ்சைப் பெருங்கோயிலின் சில பகுதிகளை இவ்விடயத்தில் ஆராயக்கூடியதாகவிருந்தது.

அதேவேளை காஞ்சி காமாட்சி கோயில் மற்றும் பல்லவர் காலச் சிற்பங்கள் எல்லாம் பௌத்த - சமணப் பின்னணிகளை உடையவை என்ற கருத்தும் பேராசிரியர் லெனினால் முன்வைக்கப்பட்டன. எனினும் அவை பற்றி இவ்விடத்தில் அதிகம் கூறாமல் விட்டுவிடுகின்றேன்.

ஒட்டுமொத்தத்தில் லொயலாக் கொலிச் கொஸ்ரலில் நடந்த பேராசிரியர் லெனினுடனான கலந்துரையாடல் மிக்க பயனுடையதாக இருந்தது.

அவரின் கலந்துரையாடல் முடிவடைந்து எல்லோரும் விடைபெற்றுச் செல்ல நேரம் நள்ளிரவு 12.30 ஆயிற்று. (வளரும்)


## இராஜகோபுரத்தில் இருந்த தேனீக்களை தீயிட்டு எரித்தனர்

என்.விஜயன்



கோபுரத்தின் நெடுக்குத் தோற்றம்

கோயிலிலுள்ள சான்றாதாரம்





தஞ்சைப் பெருங்கோயிலில் உள்ள பிரமாண்டமான நந்தி

(படங்கள்: தம்பியண்ணா)

### தேன்கூடு எரிக்கப்பட்டது

பெருங்கோயிலில் உள்ள இராஜகோபுரத்தில் இராட்சதத் தேன்கூடு இருந்தது. இந்தத் தேன்கூடு எப்போது கட்டப்பட்டதென காலம் வகுத்துக் கூறமுடியாது. அந்தளவிற்கு தஞ்சைப் பெருங்கோயிலின் பழமை இதற்கும் உண்டு. ஆயினும் அந்த தேன்கூடு பற்றியோ, தேனீக்கள் பற்றியோ யாரும் கவலைப்பட்டது கிடையாது.

கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு இரண்டொரு தினங்கள் இருப்பதற்கு முன்னதாக மகாசபை கூடி ஒரு முடிபை எடுத்தது.

இராஜகோபுரத்தில் உள்ள தேனீக்களை தீயிட்டு அழித்துவிடுவதென்பதே அந்த முடிபாகும்.

இராஜகோபுரத்திலுள்ள தேனீக்களை தீக்கிரையாக்குவதை மகாசபையில் இருந்த சிலர் எதிர்த்தனர். இருந்தும், பெரும்பான்மையினர் தேனீக்களைத் தீக்கிரையாக்கும் முடிபுக்கு கையுயர்த்தியதால், இரவோடிரவாகத் தேன்கூடு எரிக்கப்பட்டது.

தேன்கூடு எரிக்கப்பட்ட பின்னர் தீயில் கருகிய தேனீக்கள் கும்பல் கும்பலாகக் குவிந்து கிடந்தன.

தேன்கூட்டிலிருந்து சொரிந்த தேன் இராஜகோபுரத்தின் உட்சுவர் முழுவதையும் நனைத்து, தேனாபிஷேகம் செய்தது.

காலாகாலமாக இருந்த தேனீக்களுக்கு இட்ட தீயே கும்பாபிஷேகக் கொட்டகையிலும் விழுந்திருக்க வேண்டும் என்ற ஊகங்கள் அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தன.

எதுவாயினும் தீயில் கருகிய தேனீக்கள் போல, ஆலயத்தில் இருந்த 60 பேர் கருகிமாண்ட சோகம் தஞ்சைப் பெருங்கோயிலின் புகழ்மிக்க வரலாற்றில் துன்பகரமான பாகமாக அமைந்துவிட்டது.

### பேராசிரியரின் கருத்துரை நிறைவு

பேராசிரியர் லெனினுடனான கருத்தரங்கில் பல விடயங்களைப் பகிர்ந்துகொண்டோம். இராஜராஜ சோழன் தான் கட்டிய தஞ்சைப்

## பிரகதீஸ்வரர் (பெருவுடையார்) கோவில், தஞ்சாவூர்

முதலாம் இராஜராஜசோழனுடைய (985 - 1012 கி.பி.) உன்னத படைப்பான இப்பெரிய கோயில் கல்வெட்டுக்களில் ராஜராஜேச்சுரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இம்மன்னனின் 25 ஆம் ஆண்டு ஆட்சியின் 275 ஆவது நாளில் (கி.பி. 1010) பூசனைக்குரியதாக (கும்பாபிஷேகம்) செய்யப்பட்டது.

கட்டுமான கற்கோவில்களில் இந்தியாவிலேயே மிகப்பெரியதான இக்கோவிலின் பரந்த வெளிச்சுற்று சுமார் 800 அடி நீளமும், 400 அடி அகலமும் கொண்டது. இதன் பிரகாரத்தில் தொடர்ந்து கட்டப்பட்டிருக்கும் சுற்றுமாளிகை உண்டு. கிழ்த்திசையில் இக்கோயிலின் நுழைவு வாயிலாக இரு சீரிய, ஏறக்குறைய சமகாலத்தவையான கோபுரங்கள் உள்ளன. அதேபோல வெளிச்சுற்றில் வடக்குத் திசையில் உள்ள சண்டேசுவரர் சந்நதியும் அதேகாலத்தியதாகும்.

தென்மேற்கு, வடமேற்கு திசைகளில் கணபதி, சுப்பிரமணியர் சந்நதிகள் உள்ளன. வடகிழக்கில் அம்மன் சந்நதி உண்டு. குறிப்பாக சுப்பிரமணியர் கோயில் நாயக்கர் காலத்துப் பாணிக்கு மிகச் சிறந்த உதாரணமாக அமைவதோடல்லாமல், ஆறுபட்டை சிகரத்துடன் கூடிய விமானமாக ஆறுமுகனுக்கு அமைந்திருப்பது அரியதொரு படைப்பாகும்.

நந்திமேடையில், உருவத்தில் மிகப்பருத்த ஒரேகல்லான நந்திப் பெருவுடையாரின் பருத்த லிங்கவடிவிற்கு மிகப்பொருத்தமாக அமைந்துள்ளது.

கோயிலின் அதிட்டானத்தின் பரப்பு 150 அடி சதுரமும், அதில் விமானம் உள்ளடக்கமாக 100 அடி சதுரத்திலும் கட்டப்பட்டுள்ளது. கீழ்தளத்தில் இரண்டு பூமிகளாக உயர்ந்து அதற்கு மேல்மாடி அடுக்குகள் தொடர்ந்து அமைந்து, விமானம் சுமார் 200 அடி உயரமுள்ள நெடிய படைப்பாகி அதன்மேல் 80 டன் எடையுள்ள பிரம்மரந்திரக்கல்லுடனும் எண்பட்டை சதுரமான சிகரத்துடனும் அமைந்துள்ளது. திராவிட முக்கிய விமானப் பாகுபாட்டின் இலக்கணமாக நிறுவப்பட்டுள்ள இதன் ஆகிருதியை தட்சிணமேரு என்று அழைப்பர்.

அடித்தளத்தின் வரிசையில் பெருவாரியான கல்வெட்டுக்கள் ராஜராஜனின் காலத்தவையாகக் காணப்படுகின்றன. இவை சிவநெறிச்செல்வனான மன்னனின் மானியங்கள், திருப்பணிகள், தானங்கள் மற்றும் கோயிலின் வளர்ச்சிக்கான ஆக்கவேலைகள் எல்லாவற்றையும் நன்கு குறிக்கின்றன. இக்கோயிலே சிற்பக் கலைக்கும், சித்திர, நாடக, நடனக் கலைக்கும் மற்றும் இசை பண்பாடுகளுக்கும் கருவூலமாக திகழ்ந்தது என்றால் மிகையல்ல. கோயிலின் வெளிச்சுவற்றில் பெரு உருவில் துர்க்கை, பிச்சாடனர், வீரபத்திரர், காணந்தகர், நடேசர், லெட்சுமி, சரஸ்வதி, அர்த்தநாரீஸ்வரர் மற்றும் சந்திரசேகரர் முதலிய தெய்வ வடிவங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

கருவறையைச் சுற்றியுள்ள உண்ணாழிகையின் சுவற்றில் சோழர் காலத்து வண்ண ஓவியங்கள் (இவை நாயக்கரது ஓவியங்களுக்கு உள்ளிருந்து முறைப்படி சுத்தம் செய்து வெளிப்படுத்தப்பட்டவை) திரிபுராந்தகர் இராஜராஜனும், கருவூர்த்த தேவரும், சுந்தரரும், சேரமான்பெருமானும் மற்றும் சப்த கன்னிகைகள் முதலியவை தீட்டப்பட்டுள்ளன. கருவறையின் மேல்தளத்தின் சுவர்களில் பரதநாட்டிய சாஸ்திரக் கரணவகைகள் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இவையாவும் இக்கோயிலின் புகழையும், அதை நிறுவிய சோழ மன்னனின் மாண்பையும் ஒருங்கே நிலைநாட்டும் அளவுகோலாக விளங்குகின்றன.

தென்மேற்கிலுள்ள கணபதியின் சந்நதி மராட்டிய மன்னரான இரண்டாம் சரபோஜி அவர்களால் புதுப்பிக்கப்பட்டது.

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை

(கல்வெட்டில் குறிக்கப்பட்டவாறான வாசகம் இங்கு தரப்பட்டுள்ளது)

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:19 ஆக்கம்: சுந்தர் வெளியீடு


வினாத்தாள் - I 45 நிமிடங்கள்

❖இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.


❖தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☼கீழே வட்டங்களினுள் தரப்பட்டுள்ள எண்களைப் பெறுமானம் கூடுகின்ற ஒழுங்கில் (ஏறுவரிசையில்) அம்புக்குறிகளினால் இணைக்குக.


01.




02.




☼உரு காட்டுவது பிள்ளைகள் நால்வர் முற்றத்தில் வட்டங்கள் மூன்றை வரைந்து, அவ்வட்டங்கள் மூன்றின் மீதும் நின்றுகொண்டிருக்கும் முறையை ஆகும்.




*சிறிய வட்டத்தின் 'ஆரை' 1 மீற்றர் ஆகும்.
*நடுவிலுள்ள வட்டத்தின் 'ஆரை' 2 மீற்றர் ஆகும்.
*பெரிய வட்டத்தின் 'ஆரை' 4 மீற்றர் ஆகும்.
*Oஎன்பது வட்டங்கள் மூன்றினதும் மையம் ஆகும்.

03. Oவிலிருந்து சமனான தூரத்தில் நின்றுகொண்டிருக்கும் பிள்ளைகள் யாவர்?
(------------------------------)


04. D நின்றுகொண்டிருப்பது, Aயிற்கு எத்தனை மீற்றர் தூரத்தில்?
(------------------------------)

☼A,B,C,D எனும் பிள்ளைகள் நால்வர் தாம் நின்றுகொண்டிருக்கும் வட்டத்தின் மீது சரியாக ஒரு சுற்று வீதம் சென்றார்கள்.

05. I குறைவான தூரம் சென்றுள்ளவர் யார்? (------------------------------)
II கூடுதலான தூரம் சென்றுள்ளவர் யார்? (------------------------------)

06. I எத்தனை பிள்ளைகள் சமனான தூரம் சென்றுள்ளனர்?
(------------------------------)
II சமனான தூரம் சென்றுள்ள பிள்ளைகளின் பெயர்களை எழுதுக?
(------------------------------)

☼குறித்தவொரு சதுர வடிவமான காணி A,B,C,D எனும் நால்வருக்கிடையே பகிரப்பட்ட முறையைக் கீழே உள்ள உரு காட்டுகிறது.





Aயிற்குக் கிடைத்த காணியின் பருமன், Bயிற்குக் கிடைத்த காணியின் பருமனின் நான்கு மடங்காகும்.

07. Bயிற்குக் கிடைத்த காணியின் பருமன் எத்தனை பரப்பு?
(------------------------------)

08. Dயிற்குக் கிடைத்த காணியின் பருமன எத்தனை பரப்பு?
(------------------------------)

09. முழுக்காணியின் பருமன் எத்தனை பரப்பு?
(------------------------------)

☼இவ்வுரு காட்டுவது A,B,C,D எனும் காகித அட்டைத் துண்டில் வரையப்பட்டுள்ள ஒரே சம அளவுள்ள நான்கு வட்டங்களாகும். வட்டம் ஒன்றின் ஆரை 4cm ஆகும்.





10. A,B,C,D எனும் காகித அட்டைத் துண்டு சதுர வடிவமானதா? செவ்வக வடிவமானதா?
(------------------------------)

11. இக்காகித அட்டைத் துண்டின் Bயிலிருந்து Cவரையுள்ள நீளம் எவ்வளவு?
(------------------------------)

12. ஓர் எறும்பு, A யிலிருந்து B, C யினூடாக D வரை சென்று மீண்டும் அதே வழியாக A வரை திரும்பி வந்தது. எறும்பு பயணம் செய்துள்ள முழுத் தூரத்தையும் காண்க?
(------------------------------)

☼பிள்ளைகள் நால்வர் இவ்விருவராக நின்றுகொண்டிருக்கும்போது அவர்களின் உயரங்கள் பின்வரும் உருக்களினால் காட்டப்பட்டுள்ளன.




13. சுனில், கமல், ரவி, அனில் ஆகிய பிள்ளைகள் நால்வருள் உயரம் கூடியவர் யார்? (------------------------------)

14. பிள்ளைகள் நால்வருள் குள்ளமானவர் யார்?
(------------------------------)

15. பிள்ளைகள் நால்வரினதும் பெயர்களை, அவர்களின் உயரங்கள் அதிகரிக்கும் ஒழுங்கின் முறையே எழுதுக?
(------------------------------)

☼ஆங்கில நெடுங்கணக்கில் சில எழுத்துக்கள் கீழே உள்ள வரிசையில் தரப்பட்டுள்ளன.

**A , B , C , D , E , F , G , H , I , J , K , L , M , N , O , P**

16. A, C, F, J ☐

17. AC, BD, CE, DF ☐


18. AC, DF, GI, JL ☐

☼பின்வரும் உருக்களில், வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களை அவ்வெற்றிடங்களிலேயே எழுதுக.

19.

| | | |
|---|---|---|
| 4 | 3 | 8 |
| | 5 | 1 |
| 2 | 7 | 6 |

20.





21. 0,9,1,8 ஆகிய எண்கள் 4 ஐயும் பயன்படுத்தி எழுதக்கூடிய 4 எண்கள் கொண்ட மிகப்பெரிய எண் யாது?
(------------------------------)

22. ஒரே சம நீளமுள்ள, ஈர்க்குத் துண்டுகளை உபயோகித்து உரோமன் எண்களைச் செய்த ஒரு பிள்ளைக்கு, 19 ஐச் செய்வதற்கு ஈர்க்குத் துண்டுகள் 5 தேவைப்பட்டன. அதற்கமைய 23ஐ உரோமன் எண்ணில் செய்வதற்கு அப்பிள்ளைக்கு எத்தனை ஈர்க்குத் துண்டுகள் தேவைப்படும்?
(------------------------------)

23. பக்கமொன்றின் நீளம் 10cm உடைய சதுரவடிவமான காகித அட்டைத் துண்டொன்றை சரியாக இரண்டாக வெட்டிய பின்னர், சம அளவுள்ள செவ்வக வடிவங்கள் 2 கிடைக்கும். அச்செவ்வக வடிவத்தின் (ஒரு துண்டின்) நீளத்தையும் அகலத்தையும் காண்க.
அகலம்: (--------------------) நீளம்: (------------------------------)

24. 2இற்கும் 155 இற்கும் இடையிலுள்ள மிகச் சிறிய ஒற்றை எண் ஒன்றையும், மிகப் பெரிய இரட்டை எண் ஒன்றையும் எழுதுக?
ஒற்றை எண்: (--------------------) இரட்டை எண்: (--------------------)

25.



உரு காட்டும் வட்ட வடிவமான காகித அட்டைத் துண்டிலிருந்து நிழற்றப்பட்டுள்ள அளவில் சிறிய காகித அட்டைத் துண்டுகள் எத்தனை வெட்டலாம்?
(------------------------------)

☼பின்வரும் நொடிகளுக்குரிய விடைகளை உரிய வெற்றிடங்களில் எழுதுக.

26. நான் பிரயாணம் செய்வது கடலில் ஆகும். எனக்கு ஏராளமான பொருட்களையும், மக்களையும் சுமந்து செல்ல முடியும். நான் யார்?
(------------------------------)

27. அதிகம் நான் தேவைப்படுவது வயது முதிர்ந்தவர்களுக்காகும். புத்தகங்களையோ பத்திரிகைகளையோ வாசிப்பதாயின் நான் இல்லாமல் அவர்களால் இயங்கவே முடியாது. கண்பார்வை குறைந்த சில இளைய சமுதாயத்தினருக்கும் நான் மிகவும் தேவைப்பட்டவன். நான் யார்?
(------------------------------)

28. பகற்காலங்களிலும், அதிகமாக இராக்காலங்களிலும் சிறுவர்களும் பெரியோர்களும் என்னைச் சூழ்ந்துகொள்வர். படமும் ஒலியும் என்னிலிருந்து ஒரே நேரத்தில் வெளியாகிறது. எமது நாட்டைப் போல் வேறு நாடுகளின் விபரங்களையும் என்னிலிருந்து தெரிந்துகொள்ளலாம். நான் யார்?
(------------------------------)

☼பின்வரும் கவிதையை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாவுக்கு விடை தருக.

வெள்ளத்தால் போகாது
வெந்தணலால் வேகாது
கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது

29. மேலேயுள்ள கவிதை எதைப் பற்றிக் கூறுகிறது?
1)வெள்ளம் 2)கல்வி 3)தணல் 4)கொலை

30. வெந்தனல் என்பதன் பொருள்?
1)வெள்ளம் 2)வெம்மை 3)நெருப்பு 4)மழை

☼மிகவும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

31. நத்தையின் முட்டையின் நிறம் யாது?
1)வெள்ளை 2)மஞ்சள் 3)சிவப்பு 4)கபிலம்

32. தரப்பட்டுள்ள தாவரங்களில் விலங்குகளில் தங்கியிருக்கும் தாவர வகையின பெயரைக் குறிப்பிடுக?
1)துளசி 2)சீதேவியார் செய்கமுநீர்
3)கெண்டித்தாவரம் 4)குப்பைமேனி

33. எமது தேசிய விளையாட்டு எது?
1)சடுகுடு 2)எல்லே 3)கிரிக்கெற் 4)கரப்பந்தாட்டம்

34. பூமிக்கு மிக அண்மையிலுள்ள கோள் எது?
1)புதன் 2)சுக்கிரன் 3)செவ்வாய் 4)வியாழன்

35. இலங்கை நாட்டுக்கே உரிய பிராணி?
1)மர அணில் 2)காகம் 3)செண்பகம் 4)மயில்

(07 ஆம் பக்கம் பார்க்க...)

# தரம் – 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினாத்தாள் இல:17

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

| | |
|---|---|
| 01.சி.ஜெயக்குமார் | யா/வல்வை அ.மி.த.க பாடசாலை. |
| 02.பு.வினஜா | யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம். |
| 03.தி.திலீப்குமார் | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 04.பி.சகானா | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 05.அ.டார்வின் | யா/புனித சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம். |
| 06.ஆ.ருபினஸ் | யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம். |
| 07.சி.ஆனந்தப்பிரியா | யா/வல்வை சிவகுரு வித்தியாலயம். |
| 08.ஸ்ரீ.கானப்பிரியா | யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம். |
| 09.ரா.திவாகர் | யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம். |
| 10.ஜெ.இளஞ்செழியன் | யா/தேவரையாளி இந்துக் கல்லூரி. |
| 11.செ.அனோஜன் | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். |
| 12.எ.அ.மிதுளா | யா/மத்திய கல்லூரி. |
| 13.ரெ.அலெக்சன் | யா/மத்திய கல்லூரி. |
| 14.கோ.விதுசன் | யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம். |
| 15.இ.ராகவன் | யா/வல்வை சிவகுரு வித்தியாலயம். |
| 16.பு.நிரோஜினி | யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம். |
| 17.ரொ.ஜெயக்குமார் | யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம். |
| 18.கு.சுரேன் | யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச மகா வித்தி. |
| 19.டி.அருந்தவராஜ் | யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம். |
| 20.ம.யூலியன் | யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம், |
| 21.யோ.ரொபின்சன் | யா/புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம். |
| 22.ம.மரியதனுசன் | யா/புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம். |
| 23.ப.நிருபன் | யா/மத்திய கல்லூரி. |
| 24.அ.பிரசாத்தாஸ் | யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம். |
| 25.த.மதுசன் | யா/மத்திய கல்லூரி. |
| 26.ம.தருஷணி | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். |
| 27.கு.ஸ்.அலெக்ஸ் | யா/மத்திய கல்லூரி. |
| 28.ச.கம்சா | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 29.ரொ.அசோக் | யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம். |
| 30.ஸ்ரீ.சினேகா | யா/மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை. |
| 31.தி.ஷரவணபவன் | யா/சுன்னாகம் இராமநாதன் கல்லூரி. |
| 32.செ.சுலக்சன் | யா/மானிப்பாய் விவேகானந்தாக் கல்லூரி. |
| 33.செ.துவாரகா | யா/ஏழாலை மேற்கு சைவ சனமார்க்க வித்தியாலயம். |
| 34.யோ.நிசாந்தன் | யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம். |
| 35.ஜெ.சுஜனிகா | யா/மானிப்பாய மெமோறியல நவோதயா கல்லூரி. |
| 36.க.நிசானி | யா/வரணி மகா வித்தியாலயம். |
| 37.வி.ஆரணி | யா/சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 38.க.போல்ராஜ் | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 39.ப.ஸ்ரெபான் | யா/மத்திய கல்லூரி. |
| 40.கி.மாதுளா | யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை. |
| 41.ப.மதூசன | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 42.ஓ.நிதூசன் | யா/உடுவில் மகளிர் கல்லூரி. |
| 43.ச.நிருசிகா | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |
| 44.பு.ரிசாந்தினி | யா/வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 45.ச.திலக்ஷி | யா/புனித ஜோன் பொஸ்கோ மகா வித்தி. |
| 46.க.தரன் | யா/உடுப்பிட்டி அமெரிக்கன மிசன். |
| 47.ஜெ.மதுசனா | யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை. |
| 48.ச.பிரணவன் | யா/நவாலி சென் பீற்றர்ஸ். |
| 49.செ.மாதுரியா | யா/புனித ஜோன் பொஸ்கோ மகா வித்தியாலயம். |
| 50.இ.வைஷ்ணவி | யா/புனித ஜோன் பொஸ்கோ மகா வித்தியாலயம். |
| 51.பு.பிரியதர்சன் | யா/நவாலி மகா வித்தியாலயம். |
| 52.வி.சிந்துஜன் | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 53.அ.பாலமுரளிகிருஷ்ணா | யா/வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 54.மு.பிரசண்ணா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 55.வி.பிரியங்கா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 56.த.தர்சன் | யா/மத்திய கல்லூரி. |
| 57.க.தருசன | யா/அமெரிக்கன் மிசன் கல்லூரி. |
| 58.பு.சரண்யா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 59.மு.விமலோசிகா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 60.கு.ரஜீவன் | யா/மத்திய கல்லூரி. |
| 61.இ.சங்கீதா | யா/புனித ஜோன் பொஸ்கோ மகா வித்தியாலயம். |

## வினாத்தாள் 17 இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **01.** (3) | **02.** (3) | **03.** (3) | **04.** (4) | **05.** (6) | **06.** (2) |
| **07.** (5) | **08.** ABACBDEHGMNZR | | | **09.** A-2 B-2 C-1 | |
| **10.** P,Q,R,S,T,U | | **11.** (4) | **12.** (3) | **13.** (4) | |
| **14.** நூல் கட்டுதல் → பாதணியை அணிதல் → காலுறை அணிதல் | | | | **15.** 425g | |
| **16.** மூன்று | **17.** நான்கு | **18.** 8km | **19.** ரூபா.20.00 | **20.** (4) | **21.** (3) |
| **22.** (4) | **23.** (1) | **24.** (3) | **25.** (1) | **26.** (2) | **27.** (3) |
| **28.** (2) | **29.** (2) | **30.** (3) | **31.** (3) | **32.** (2) | **33.** (3) |
| **34.** (3) | **35.** (3) | **36.** 3 5 1 4 2 | | **37.** 2 1 4 5 3 | |
| **38.** A, E | **39.** D | **40.** A,B,E | | | |

(0 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

☼ **36-40 வரையிலான வினாக்களில் ஒரு பிரச்சினையும இரு கூற்றுக்களும் தரப்பட்டுள்ளன. இவ்விரு கூற்றுக்களும் அப்பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானவையா என முடிவு செய்க.**

கூற்று I மட்டும் போதும் எனில் விடை A யையும்
கூற்று II மட்டும போதும எனில் விடை B யையும்
இரு கூற்றுக்களும் தேவை எனில் விடை C யையும்
இரு கூற்றுக்களும் போதாது எனில் விடை D யையும் தெரிவு செய்க.

**36.** பிரச்சினை : உமது அப்பா ஒரு ஆசிரியரா?
கூற்று I : ஆம், ஆசிரியர்.
கூற்று II : எனது அம்மாவும் ஒரு ஆசிரியர்.
1)A 2)B 3)C 4)D

**37.** பிரச்சினை : தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் நீர் பெற்ற புள்ளி யாது?
கூற்று I : எனது தங்கை பெற்ற புள்ளி 144.
கூற்று II : நானும் தங்கையும் ஒரே புள்ளிகளையே பெற்றோம்.
1)A 2)B 3)C 4)D

**38.** பிரச்சினை : சித்திரை வருடப்பிறப்பு எப்போது கொண்டாடுவார்கள்?
கூற்று I : தமிழர்கள் கொண்டாடும் போது
கூற்று II : சித்திரை மாதம் 14ஆம் திகதி
1)A 2)B 3)C 4)D

**39.** பிரச்சினை : மின்குமிழிலிருந்து வெளிவிடப்படும் சக்திகள் எவை?
கூற்று I : ஒளிசக்தி
கூற்று II : வெப்பசக்தி
1)A 2)B 3)C 4)D

**40.** பிரச்சினை : பொருள் ஒன்றைப் பார்ப்பதற்கு அவசியமானவை?
கூற்று I : வெளிச்சமும், பொருளும்
கூற்று II : கண்ணும், பொருளும்
1)A 2)B 3)C 4)D

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 19

**மாணவர் முழுப்பெயர் :** ........................................

**பாடசாலையின் பெயர் :** ........................................

**வீட்டின் முகவரி :** ........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 09.08.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
**கல்விப்பகுதி,**
**வினாத்தாள் இல - 19**
**இல.3, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் றோட், யாழ்ப்பாணம.**

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின பெயரினை முழுமையாக எழுதவும்.

# இளையோர் நீச்சல் கற்க முன்வர வேண்டும்

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

காந்தருபன் நீச்சல் கலைக்கூடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காந்தருபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. பாரிய செயற்கை நீச்சல் தடாகமான இதன திறப்பு விழாவில் தமிழீழ கடறபடையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்.

முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான நிகழவில இந்நீச்சல் தடாக உருவாக்கத்திற்கு முழுபபங்களிபபையும் நல்கிய புலமபெயர்நது வாழும் ஜெகன் பொதுச் சுடரினை ஏற்றினார். ஈகைச் சுடரினை கிருஸ்ணமூர்த்தி ஆசிரியா





ஏற்றினார். தொடக்கவுரையினை காந்தருபன் அறிவுச்சோலை பொறுபபாளர் புவியரசனும அறிமுகவுரையினை நீச்சலாசிரியர் பஞ்சதம்புவும் நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் கடற்புலிகளின் சிறபபுத் தளபதி கேணல் சூசை சிறப்புரையாற்றுகையில், நீச்சல் கலையென்பது மிக முக்கியமானதொன்று. தேசியத் தலைவரின் கனவுகளில் இதுவும் ஒன்று. ஆனால் எமது சமூகக் கட்டமைபபுக்கள் நீச்சல் கலைக்கு தடையாகவே இருந்து வந்துள்ளன. தேசியத் தலைவர் கூட தனது சிறுவயதில் தாய் தந்தையருக்குத் தெரியாமல்தான் ஊரணியிலுளள ஊற்றுக்கு வந்து நீந்திவிட்டுப் போவாராம். இதனை தலைவர் பல தடவைகள் சொல்லியிருக்கின்றார்.

இளைய சமூகத்தினர் கட்டாயம் நீச்சல் கற்றுக் கொள்ளவேண்டும். சுனாமிப் பேரலைகளால் முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் 4500 பொதுமக்கள் இறந்துள்ளனர். எல்லோருக்கும் நீச்சல் தெரிந்திருந்தால் இதில் 1500 பேரையாவது காப்பாற்றியிருக்கலாம்.

புதிய சமூகக் கட்டமைப்புக்குள ஒரு முன்னுதாரணமாக இளையோர்கள் நீச்சல் கற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என்றார். (அ)

# தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று இலங்கையில் பெருந்தாக்கம் இல்லை

(கொழும்பு)

இந்தியாவில் பருவமழை காரணமாக இதுவரை 900ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவின் மேற்கு மாநிலங்களில் ஏற்படடது போன்ற பலத்த மழையுடன் கால நிலை இலங்கையிலும் ஏற்படுவதற்கான வாயப்பு இல்லையென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மத்திய மலைப் பிரதேசத்தில் பலத்த காற்று வீசும் எனறும், மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் அடுத்தவாரம் வரை மழை பெய்யக்கூடும் எனவும் வளிமணடலவியல் திணைக்களம் தெரிவிக்கிறது.

வடமேல் மாகாணத்தின் சில இடங்களிலும் மழை பெய்யக்கூடும். அடுத்த சில வாரங்களில் பருவநிலை மாற்றங்கள் மோசமடையக் கூடுமாகையால் மத்திய மாகாணங்களில இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான வாய்ப்புககள் உள்ளன. (அ)

# மண்ணாசையால் கொலை பாதகனான அண்ணன்

மனிதன் பிறக்கும் போதே அவனுடன் ஆசையும் பிறந்து விடுகிறது. அந்த ஆசை அளவோடு பிறந்து விடுகிறது. அந்தஆசை அளவோடு அவன் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை மனிதன மகிழ்ச்சியாக இருக்கிறான். ஆனால் ஆசை கட்டுப்பாட்டை மீறிப் பேராசையாகும் போது சின்னாபின்னமாகிறான். இதனால் அவன்படும் வேதனைகளும் துன்பங்களும் எண்ணிலடங்கா. அத்துடன் வாழக்கையைத் தொலைத்துவிட்டுப் பலர் திக்கற்று அலையும் நிலையும் ஏறபடுகிறது. மண்ணாசை கொண்டதனால் மகாபாரதப்போர் உருவாகியது. அதில் கௌரவர்கள் மாண்டார்கள். பஞ்ச பாண்டவர்கள் மீண்டார்கள். இப்படியாக ஒரு மகாபாரதம் உதாரணமாக இருக்கின்றபோதும். அது தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருந்த போதும் சிலர் ஏன் மண்ணாசை கொள்கிறார்கள் என்பது தெரியவில்லை. இதனால் மனைவி கணவனைக் கொல்வதும். மகள் தந்தையைக் கொல்வதும் அண்ணன் தம்பியைக் கொல்வதும் இன்றும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. இரத்த பந்தங்களும் உறவு முறைகளும் தான் நமக்குச் சொந்தமே தவிர. சொத்துப்பத்துகள் சொந்தமில்லை என்பது மனிதனுக்கு நன்றாகத் தெரியும்.

நாம் அனைவரும் இறைவன் உருவாக்கிய பொம்மைகள். அவன் ஆட்டிவைக்கிறான். நாம் ஆளுகிறோம். ஆடி முடிந்து களைத்து நாடி நரம்பு ஓய்ந்தும் அடங்கி விடுகிறோம். நமது உடலும் உயிரும் நமக்குச் சொந்தமில்லை. அது கடைசியில் போகுமிடம் நமக்குத் தெரிவதில்லை. எல்லாம் தெரிந்திருந்தும் ஏன் சிலர் தவறுகள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விடயம். அந்த வரிசையில் ஒரே தாய் வயிற்றில் பிறந்த இரண்டு சகோதரர்களிடையே பூர்வீக சொத்துத் தகராறு ஏற்பட்டு கோபம் கொண்ட அண்ணன் தம்பியையும் தம்பியின் மனைவியையும் இரும்புக் கம்பியால் அடித்துக் கொன்று விட்டான். அதோடு விடாமல் தம்பியின் நான்கு வயது ஆண்மகனையும் ஒன்றரை வயது பெண் குழந்தையையும் அடித்துக் கொல்ல முறபட்டதனால் அவர்களுக்குப் பலத்த காயமேற்படடு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நெஞ்சையுருக்கும் சம்பவம் நடந்திருக்கிறது.

சென்னையை அடுத்து திருப்பூர் அருகே உள்ளது கண்ணாகப் பட்டி எனற கிராமம். இங்கு தான் மணி. அருள் என்ற இரண்டு அண்ணன் தம்பிகளும் தங்கள் மனைவி குழந்தைகளுடன் வாழ்ந்துவந்தார்கள். மணி எனபவன் மூத்தவன். இந்த மணி தந்தை சம்பாதித்துவைத்த பூர்வீக நிலத்தில் விவசாயம் செய்துகொண்டு தன் மனைவி சாந்தி மற்றும் மூன்று குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தான். இதே ஊரில் வசிக்கும் மணியின் தம்பி அருள் பக்கத்திலுள்ள கோவிலில் காவலாளியாக வேலை செய்து வந்தான். அங்கு தான் லதாவைச் சந்தித்தான். அந்தக் கோவிலுக்குச் சாமி கும்பிட வந்த லதா என்ற பெண்ணின் மீது காதல் கொண்ட அருள். வீட்டை எதிர்த்துத் திருமணம் செய்து கொண்டு அதே கோவிலுக்கருகில் ஒரு வாடகை வீட்டில் மனைவி லதாவுடன் வாழ்ந்து வந்தான். திருமணமாகி 8 வருடங்களாக இரண்டு பேரும் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்திவந்த போது அரசாங்கம் வீடு கட்டித்தருவதாக அறிவித்தபின் அருளும் தன் மனைவ லதா இரண்டு குழந்தைகளுடன் புதிய வீடுகட்டி அதில் குடியேறினான். இச் சூழ்நிலையில் அண்ணன் மணி. 5ஏக்கர் நிலத்தில் 10 வருடமாக விவசாயம் செய்தும் மகசூலை தம்பி அருளுக்கோ இரண்டு சகோதரிகளுக்கோ தாய்க்கோ சிறிதும் தராமல் இருந்திருக்கிறான். இதனால் அருளின் மனைவி லதாவும் சகோதரிகளும் மணியின் சொத்தில் பங்கு கேட்கும்படி அருளிடம் சொல்லியிருக்கிறார்கள். மணியிடம் 50 இலட்சம் ரூபா மதிப்புள்ள சொத்தைப் பங்குகேட்க இருவருக்கும் வாக்குவாதம் முற்றியிருக்கிறது. இந்த இடத்தில்தான் பகையும் கொலைவெறியும் மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

> **மண்ணாசை மணியை கொலை வெறியனாக்கியது. உடன் பிறந்த தமபியையும் அவன் மனைவியையும் அவனது இரு குழந்தைகளையும் இரும்புக் கம்பியால் அடித்துக்கொன்றான்.**
>
> **இக்கொலைகளினால் அவன் சாதிததது என்ன? சொத்தை அனுபவிக்க முடிந்ததா? சொந்தக் குடும்பத்துடன் வாழ முடிநததா?**
>
> **தூக்குக் கயிறா? காராக்கிரகமா என ஊசாடுகிறது அவன் வாழ்ககை.**
>
> **அவன வாழ்ககை இவ்வதம் பாழானதறகுக் காரணம ஆசை. மண் ஆசை.**

மேலும் சொத்து விவகாரமாக மணியிடம் அருள் அடிக்கடி சண்டை போட்டுவந்ததாகவும் அத்துடன் மணி செல்லும் இடங்களுக்குச்சென்று வழிமறித்துத் தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் சொல்லப்படுகிறது. இந்தச் சண்டை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேபோக. லதா தன் கணவன் அருளைத் தூண்டிவிடுவதும் சாந்தி தன கணவன் மணியைத் தூண்டிவிடுவதும் அண்ணன் தம்பி இருவரும் சணடைபோட்டுக் கொள்வதும் வாடிக்கையாக ஆகியிருக்கிறது.

லதா சாந்தியுடனும் சாந்தி லதாவுடனும் சண்டையிடவே பிரச்சனை மேலும் பெரிதாகிவிட்டது. ஒரு நாள் அருள் மணியின் குழந்தையை அடித்துவிடவே. அதனால் சாந்தி கோபம் கொண்டு தகாத வார்த்தைகளால் திட்டியிருக்கிறாள்.

லதா-சாந்தியிடையேயான சண்டைகளும் மணி-அருளுக் கிடையிலான சண்டைகளும் பெருகிக் கொண்டு போகவே இறுதியாக சொத்தைப் பிரிப்பதற்கு அருள் முடிவு செய்தான். அதனால் சொந்தக்காரர்களை வரவழைத்துப் பஞ்சாயத்து நடத்தப்போவதாக கூறினான்.

அருளின் தொந்தரவு தாங்காமல் மணியும் சொத்தைப் பிரித்துக் கொடுக்க ஒப்புக்கொண்டான். இருந்தாலும் அவன் மனதுக்குள் அருள் மீது கோபம் கொப்பளித்துக் கொலை வெறி தாண்டவமாடியது. எந்தச் சூழ்நிலையிலும் அருளுக்கு 50 இலட்சம் ரூபா மதிப்புள்ள சொத்தைப் பிரித்துக்கொடுக்கக்கூடாது; அத்தனையையும் தனக்கே சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்ற பேராசை மணிக்கு வந்துவிடவே. தன்னுடன் கூடப்பிறந்த. இரத்தத்தின் இரத்தமான தம்பி என்று கூடப் பாராமல் சொத்து மட்டுமே முக்கியமென்று எண்ணி அருளைக் கொலை செய்யத்திட்டமிட்டிருக்கிறான் மணி.

செவ்வாய்க்கிழமை இரவு அருள் கோவில் வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு மொட்டை மடிக்குத் தூங்கச் சென்றிருக்கிறான். லதாவும் குழந்தைகளும் வீட்டிலேயே ஒரு அறையில் தூங்கியிருக்கிறார்கள். அதுதான் அவர்களின் கடைசி இரவு என்பதை அறியாமல். இந்தச் சமயத்தில் நள்ளிரவு 12 மணிக்கு கொலைவெறியோடு மணி அருளின் வீட்டுக்கு வந்திருக்கிறான். மாடிப் படியேறி மொட்டைமாடிக்குச் சென்றிருக்கிறான் அங்குதான் தன் அண்ணன் கையாலே சாகப் போகி

## தம்பி குடும்பத்தையே கோரக் கொலை செய்த கொடுமை

றோம் என்று தெரியாமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருக்கிறான் அருள். அவனைப் பார்த்த மணி மிகவும் கோபம் கொண்டுகையில் வைத் திருந்த இரும்புக் கம்பியால் ஓங்கி அருளின் தலையில் அடிக்க. அடிபட்ட அருள் அலறக்கூட முடியாமல் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்திருக்கிறான். அப்பொழுதும் வெறியடங்காத மணி படியிறங்கி வந்து வீட்டுக்குள் குழந்தைகளுடன் உறங்கிக்கொண்டிருந்த அருளின் மனைவி லதாவின் தலையில் ஓங்கி அடிக்க லதாவும் துடிதுடித்து இரத்த வெள்ளத்தில் மிதந்திருக்கிறாள். அதோடும் கொலைவெறி அடங்காத மணி. அங்கே தூங்கிக் கொண்டிருந்த அருளின் 4 வயது மகனையும் ஒன்றரை வயது மகளையும் பச்சிளம் குழந்தைகள் என்று கூடப் பாராமல் இரும்புக் கம்பியால் ஓங்கி ஓங்கி அடித்துள்ளான். அடிபட்ட குழந்தைகள் அலறித்துடிக்கவே அங்கிருந்து ஓடியிருக்கிறான் மணி.

சந்தடி கேட்டு அங்கு கூடியவர்கள் அருளினதும் லதாவினதும் சடலங்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்ததையும். கம்பியினால் அடிக்கப்பட்ட குழந்தைகள் இரண்டும் தலையிலும் முகத்திலும் வாயிலும் பலத்த காயங்களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதையும் கண்டு உறைந்து போயிருக்கின்றனர். குழந்தைகளின் வாய்ப்பகுதியை கம்பியால் குத்திச் சிதைத்திருக்கிறது அந்த மனித மிருகம். தப்பித்தவறிக் குழந்தைகள் உயிர்பிழைத்தாலும் பல் முளைக்க வாய்ப்பில்லை என்று மருத்துவர்கள் கூறியது கொடுமையிலும் கொடுமை.

சம்பவம் குறித்துத் தகவல் அறிந்ததும் மாமல்லபுரம் பொலிஸ் சுப்பிரின்டன்டன் கற்பகவிநாயகம் இன்ஸ்பெக்டர் பொற்செழியன். சப் இன்ஸ்பெக்டர் வைரவன் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அருள். லதா. அவர்களின் இரண்டு குழந்தைகள் எல்லோரையும் மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு விசாரணையைத் தொடங்கியிருக்கிறார்கள்.

மருத்துவமனைக்கு விரையும் வழியில் அருள்-லதா இருவரும் இறந்துவிடக் குழந்தைகள் இரண்டு பேரும் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சாட்சி சொல்ல யாருமே இலலாத நிலையில் விசாரணையை ஆரம்பிதத பொலிஸ. இந்த இரட்டைக் கொலையைச் செய்தது யார் என்று கண்டுபிடிக்க முடியாமல் தவித்திருக்கிறது. கூடவே இருந்து ஒன்றுமே தெரியாத நல்லவன் போல் நாடகமாடிக் கொண்டிருநத மணி மேல் சந்தேகம் கொண்டு பொலிஸார் அவனைக் கைது செயது விசாரிக்க அங்கே கொலை செய்ததை ஒப்புக்கொண்டுள்ளான் மணி. மருத்துவமனையில் அகால மரணமடைந்த அருள் மற்றும் லதா ஆகியோரின் உடல்களைப் பிரேத பரிசோதனைசெய்து அம்புலன்ஸில் வீட்டுக்குக் கொண்டுவந்தார்கள்.

தன் தம்பி. தம்பி மனைவி என்றும் பாராமல் கொலைவெறிபிடித்த மணி பச்சிளம் குழந்தைகளையாவது விட்டு வைத்திருக்கலாம். இப்போது அந்த இரு குழந்தைகளின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

சொத்துக்கு உரியவனான தம்பி இறந்துவிட்டால் சொத்து முழுக்க தனக்கே வரும். இக் குழந்தைகள் உயிருடனிருந்தால் திரும்பவும் சொத்தைப பாககவேண்டிய நிலை ஏற்படும். அதனால் குழந்தைகளையும் முடித்துவிட்டால் பிறகு எக்காலத்திலும் சொத்துக்கு எவரும் உரிமை கொண்டாட முடியாது என்ற எண்ணத்தில் குழநதைகளையும் கொலைசெய்ய முயன்றிருக்கிறது அந்த மிருகம் என்பது ஊரவர்களது நம்பிக்கை.

இப்படியொரு கொடூர செயலைச் செய்த மணி எதைச் சாதிக்கபபோகிறான்? எந்தச சொததுக்காகத் தன் தம்பியைக் குடுமபத்துடன் கொலை செய்ய முறபட்டானோ அந்தச் சொத்தை அனுபவிக்க முடியாமல் சிறைக்குள் கம்பி எணணிக்கொணடிருகிறான் மணி தன் குடும்பத்தையும் நடுத்தெருவில் விட்டுவிட்டு.

இந்த உலகத்தில் மனிதன் வாழ்வதே கொஞ்சக்காலம் தான். உடலும் உயிரும் நிரந்தரமானவை அல்ல. என்றாவது ஒருநாள் இந்த உலகத்தை விட்டுப் போயே ஆக வேண்டும். இது காலதேவனின் கட்டளை. இது மணிக்கும் தெரிந்திருக்கும் உடன் பிறந்தவனையும் அவன் மனைவியையும் குழந்தைகளையும் கொல்ல முறபட்டதற்கு என்ன காரணம்? பேராசை! அளவில்லாத ஆசை! தான் மட்டும் வாழ வேணடுமென்ற பேராசை. தனக்கு மட்டுமே நிலம் சொந்தம் என்று பைத்தியக்காரத்தனமாக மணி எண்ணியதாலேதான் இந்தக் கொலைகளைச் செயய நேரிட்டிருக்கிறது. தன் தம்பி. தன் எச்சில் பாலைக் குடித்து வளர்நதவன. தன் ரத்தபந்த உறவு என்று தெரிந்தும் அவனை ரத்த வெள்ளத்தில் மிதக்க வைத்த மணியின் செயல் மனித செயலா? ஆசையை அடக்கத் தெரியாதவர்களுக்கு இந்த மணி ஒரு பாடமாக இருக்கட்டும்.

மனிதனுக்கு உலகில் 6 அடி நிலம் தான் சொந்தமென்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால் அந்த ஆறடி நிலம்கூட இப்பொழுது சொந்தமிலலை. இடுகாட்டில இடம் பற்றாக்குறையினால் சில நாட்கள் கழித்து ஒரு பிணத்தைப் புதைத்த குழியிலேயே மற்றொருவரைப் புதைக்கும் கட்டாயம் இன்று இருக்கிறது. அதன் பின்பும் சில நாட்கள் கழித்து அதேகுழியில் அடுத்தவரையும் அதற்கு அடுத்தவரையும் புதைக்கும் நிலை உள்ளது. ஆகவே. மனிதருக்கு அந்த ஆறடி நிலம்கூடச் சொந்தமில்லை என்பது தான் உண்மை. மனிதன் வாழும்போது செய்யும் நல்ல காரியங்கள் மட்டுமே இந்த உலகத்தில் நிலைத்திருக்கும் என்பதை ஒவ்வொரு மனிதனும் புரிந்துகொண்டு ஆசையை அளவோடு வைத்துக் கொண்டு வாழ்ந்தால் இது போன்ற கோரச் சம்பவங்கள். நெஞ்சை உருக்கும் சம்பவஙகள் நடக்காமல்

**பொ.இராசதுரை**

இருக்கும்.

ஆசையே உலக துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்கிறார் புத்தர். புத்தா. யேசு. நபிகள் நாயகம். நாயனார்கள். ஆழ்வார்கள் மற்றும் புத்திஜவிகள அனைவரும உலக துன்பங்களுக்குக் காரணமான ஆசையை அறுத்தெறியுங்கள் என்றுதான் உபதேசித்துள்ளார்கள்.

"ஆசை அறுமின்கள் ஆசை அறு மின்கள்

ஈசனோடாயினும் ஆசை அறு மின்கள்

ஆசைப்படபபட ஆய்வரும் துனபங்கள

ஆசை விடவிட ஆனந்தம் ஆமே!"

என்கிறாா திருமந்திரம் தநத திருமூலர்..

## ஆங்கில ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மொழிமூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 286 ஆங்கில ஆசிரியாகளுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

க.பொ.த.உயர்தரத்தில் சித்தியடைந்த 1000 பேருக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் இவ் ஆங்கில ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

ஏனைய பாடங்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் இவ்வாண்டு இறுதிக்குள் வழங்கப்படவுள்ளன.

இந்நியமனங்களில் திருகோணமலைப் பாடசாலைகளுக்கு 32 பேரும் மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளுக்கு 62பேரும் கல்முனை வலயப் பாடசாலைகளுக்கு 68 பேரும் வடமாகாணப் பாடசாலைகளுக்கு 124 பேரும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# வெள்ளத்தில் மிதக்கும் மும்பை நகரம் போர்க்கால அடிப்படையில் நிவாரண உதவி

(மும்பை)

மராட்டியத்தில் மழையினால் ஏற்பட்ட இறப்பு 1000 ஆக உயர்ந்தது. மும்பை நகரம் அடியோடு முடககப்பட்டது. பள்ளி - கல்லூரிகள் மூடப்பட்டன. ஒரேநாளில 200 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து கடந்த 26ஆம் திகதி மராட்டிய மாநிலத்தில் தொடர்ந்து 2 நாள் பெய்த அடை மழையில் மாநிலம் திக்குமுக்காடிப் போனது.

மும்பை விமான நிலையம் மூடப்பட்டது. வெளிமாநிலங்களில் இருந்து மும்பை செல்லும் ரயில்களும் மும்பையிலருந்து வெளி மாநிலம செல்லும் ரயில்களும் இரத்துச் செய்யப்பட்டன. மும்பை நகரில் ரயில், பஸ், டாக்சி, ஆட்டோ போக்குவரத்து முடங்கியது.

இந்நிலையில், கடந்த 30ஆம் தகதி மீண்டும மழை தாக்கியது. இதனால் நிலைகுலைந்துகிடந்த மும்பையின் நிலை இன்னும் மோசமடைந்தது. சேரியில் வாழ்பவர்கள் தெருவோரத்தில் நிற்கிறார்கள். தாழ்வான பகுதிகளில் வெள்ளம் புகுந்ததால ஆயிரக் கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றார்கள்.




மும்பையை முற்றுகையிட்ட மழை இன்னும் முடிவதாகத் தெரியவில்லை. இடுப்பளவு மழைநீர் வெள்ளத்தில் மும்பை வாசிகள் சிலர் நடந்து செல்வதையும், கார்கள் மூழ்கிக்கிடப்பதையும் காணலாம்.

அடுத்த 24 மணி நேரத்துக்கு மிகப் பலத்த மழையும் கடல்கொந்தளிப்பும் இருக்கும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளதால் மும்பை நகர மக்கள குலை நடுக்கம் கொண்டுள்ளனர்.

மும்பை நகரம் வெள்ளத்தில் மிதக்கிறது. மழை தொடர்ந்தும் நீடித்தால் நிலைமை என்ன ஆகுமோ என்ற அச்சம் உள்ளது.(து)

## வினோத செல்போன்



செல்போன்கள் கலாசாரம் இப்போது கொடிகட்டிப் பறக்கிறது. மக்களின் எதிர்பார்ப்புகளை அதிகரிக்கும் வகையில் விதவிதமான செல்போன்கள் அறிமுகப்படுத்தபபட்டு வருகின்றன.

ராஸ் ஒயர் என்ற பெயரில் ஒக்லே என்ற நிறுவனம் புதிய வகையான செல்போனை அறிமுகப்படுததியுள்ளது. கண்ணாடியுடன் இணைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்தச் செல்போனின் அறிமுகவிழா சமீபத்தில் நடந்தது. (து)




# சவுதி அரேபிய மன்னர் மரணம்

(ரியாத்)

கடந்த இரண்டு மாதங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த சவுதி அரேபியா மன்னர் பத்பின் அப்துல் அஜிஸ் நேற்று முன்தினம் அதிகாலை மரணமடைந்தார். அவருக்கு வயது 84. பத்தின் சகோதரா இளவரசர் அப்துல்லா பின் அப்துல் அஜிஸ் சவுதியின் புதிய மன்னராக நியமிக்கப்பட்டார்.

சவுதி அரேபிய மன்னர் பத்பின் அப்துல அஜிசின உடல்நலம் கடந்த மே மாதம் 27 ஆம் திகதி பாதித்தது. ரியாத் மருத்துவமனையில் அவர் சேர்க்கபபட்டார். இரண்டு மாதஙகளாக மருத்துவமனையிலருந்த அவர், சிகிச்சை பலனளிக்காமல் நேற்று முன்தினம் அதிகாலை மரணமடைநதார்.



மன்னரின் மரணத்தைத் தொடர்ந்து, அவருடைய சகோதரரான இளவரசர் அபதுல்லா பின் அப்துல் அஜிஸ், சவுதியின புதிய மன்னராக நியமிக்கப்பட்டார். அமைசசரவை மற்றும் அரச குடும்பத்தினரின் ஒப்புதலுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. கடந்த 1995 ஆம் ஆண்டில், மன்னரைப் பக்கவாதம் தாக்கியது. அப்போது முதல், இளவரசர் அப்துல்லாவே, அரசு சம்பந்தப்பட்ட முககிய நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

பக்கவாதம் தாக்கிய பின், வீல் சேரை மன்னர் பயன்படுத்தினார். மன்னரின் ஞாபக சக்தியும் கடுமையாகக் குறைந்தது. அவரைச் சுற்றி என்ன நடக்கிறது, அவருடன் கை குலுக்குபவர் யார் என்பது கூட அவருக்குத தெரியாது. அது போன்ற சமயங்களில், அவருடைய குடும்பத்தினர் உடனிருப்பர். 1923 ஆம் ஆண்டு ரியாத்தில் பிறந்த மன்னர் பத், 1982ஆம் ஆண்டு ஜுன் 13 ஆம் திகதி சவுதி அரேபிய மன்னராக முடி சூடினார்.




உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடாக சவுதி அரேபியா திகழ்கிறது. உலக எண்ணெய் வளத்தில் 25 சதவீதத்தை சவுதி அரேபியா பெற்றுள்ளது. சர்வதேசச சந்தையில் சமீபத்தில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்த போது, எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கும்படி சவுதி அரேபிய அரசை அமெரிக்கா வலியுறுத்தியது.

இதன்மூலம், எண்ணெய் விலை குறைவுக்கு வழி வகுத்தது. சவுதி அரேபியாவும், அமெரிக்காவும் சிறந்த நட்பு நாடுகளாக உளளன. மன்னரின் மறைவு காரணமாக, கச்சா எண்ணெய் வலை நேற்றுமுன்தினம் உயர்ந்தது. 50 சென்டுகள் விலை உயர்ந்து, 2 ஆயிரத்து 745 ரூபாய்க்கு (61டொலர்) ஒரு பரல் எண்ணெய் விற்றது. (து)

# விமான விபத்தில் சூடான் துணை அதிபர் பலி

சூடானில் கடந்த 21 ஆண்டுகளாக வடக்கு - தெற்கு பகுதியினருக்கு இடையே நடந்து வந்த உள்நாட்டுப் போர் கடந்த ஜனவரி மாதம முடிவுக்கு வந்தது. அங்கு புதிய அரசு பதவி ஏற்றதுடன் ஜான் கராங் துணை அதிபராகப் பதவி ஏற்றார். சமரசம் ஏற்பட முக்கிய காரணமாக இருந்தவரும் இவர்தான்.

இந்தநிலையில் துணை அதிபர் ஜான் கராங் உகாண்டாவுக்குச் சென்றுவிட்டு சூடான் திரும்பும்போது விமான விபத்தில் சிக்கிப பலியானார். அந்த விமானத்தில் அவருடன் சென்ற அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும் பலியானார்கள.


துணை அதிபர் ஜான் கராங் மரணம் அவரது ஆதரவாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கார்ட்டோம் நகரில் அவரது ஆதரவாளர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். வீடுகள், கடைகளுக்கு தீவைக்கப்பட்டன. ஏராளமான வாகனங்களை அடித்து நொறுக்கிவிட்டனர்.

இந்தக் கலவரத்தல் 24 பேர் பலியாகிவிடடனர். 100க்கும் மேற்பட்டவர்கள் காயமடைநதனர். தீவைப்பு சம்பவம் காரணமாக கார்ட்டோம் நகரம் முழுவதும புகை மண்டலமாகக் காட்சியளிக்கிறது.


மீண்டும் உள்நாட்டுப் போர் பெரியளவில வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது. (து)

கனடா நாட்டைச் சேர்ந்த ஜெகாக்ரேன் என்ற இந்த நபர் நயாகரா அருவி மேல் கயிறு மீது நடந்து ஆறு உலக சாதனைகளைப் படைத்துள்ளார். 650 அடி உயரத்தில் ஆயிரத்து 800 அடி நீள கயிறு மீது ஒவ்வொரு சனிக்கிழமையும் நடந்து சுற்றுலாப் பயணிகளை வியக்க வைக்கிறார்.



# எய்த அம்பே திரும்பிப் பாய்கிறது

(புதுடெல்லி)



அத்வானி ராஜினாமா செய்யக்கோரி ரகளையில் ஈடுபடும் லாலுபிரசாத் கட்சியினரை அடக்கிவைக காவிடில் பாராளுமன்ற அவைகளை நடத்த விடமாட்டோம் என்று மககளவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜியிடம் தேஜகூட்டணி கண்டிப்புடன கூறியுளளது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட பா.ஜ தலைவர் அத்வானி அலகாபாத் உயர் நீதிமன்ற உத்தரவுப்படி மீண்டும் அந்த வழக்கில் சேர்க்கப்பட்டு அவா மீது ரேபரேலி கோர்ட்டில் குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதைத்தொடர்ந்து அத்வானி எதிர்க் கட்சி தலைவர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று லாலுபிரசாத்தின் ராஷ்டிரிய ஜனதாதளம் மற்றும் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் மக்களவையில் போர்க் கொடி தூக்கினார்கள். அதையொட்டி நடந்த ரகளையில் அவை 2 முறை ஒத்திவைக்கபபட்டது.

குற்ற வழக்கு உள்ளோர் பிரச்சினையை ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சிகளும் கையில் எடுத்து இருப்பது பா.ஜ.வுக்கு கலககத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்வானி ராஜினாமா செய்யக்கோரி பாராளுமன்றத்தில் அமளி செய்யும் லாலு பரசாத்தின் ராஷ்டிரிய ஜனதாதளம் கட்சி எம்.பிக்களை அடக்கி வைக்கும்படி சபாநாயகரிடம் கூறுவது என்றும், அப்படி அடக்கி வைக்காவிட்டால் பாராளுமன்றத்தை தே.ஜ. கூட்டணி நடத்தவிடாதென எச்சாிப்பது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் பாராளுமன்றத்தில் உயர்பதவி வகிககககூடாது என லாலுபிரசாத்துக்கு எதிராக பா.ஜ.க. உயர்த்திய போர்க்குரல் இன்று பா.ஜ.க. பக்கம் திரும்பியுள்ளது. (து)



நியூயோர்க்கில் ஜிரா கூஸ் என்ற இடத்தில் இருக்கும் மிருகக் காட்சிச் சாலையில் உள்ள ஆசியாவைச் சேர்ந்த 22 வயது யானைக்கு சமீபத்தில் ஆண் குட்டியொன்று பிறந்தது. கேதார் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் குட்டியானை 345 இறாத்தல் எடையுள்ளது. இந்த மிருகக காட்சிச்சாலையில் கடந்த 5 வருடத்தில் பிறந்த முதல் குட்டியானை இதுவாகும்.

## முடிவை எட்டும் ஐவரி கோஸ்ட் போர்

ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட்டில் அரச படைகளுக்கும் நியூ போஸ் எனப்படும் போராளிக் குழுவிற்குமிடையில் கடந்த 3 ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவரும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சமரச நடவடிக்கைகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி நியூ போஸ் போராளிக் குழுவைச் சேர்ந்த 40 ஆயிரம் போராளிகள் தமது ஆயுதங்களைக் கையளிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எப்படியிருந்த பொழுதிலும், சமாதான பேச்சுவார்த்தைகளின் பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களுக்கு சட்டபூர்வமான வரையறைகள் தமக்கு திருப்தி அளிக்கும் வகையில் அமைய வேண்டும் எனப் போராளிகள வேண்டியுள்ளனர். (து)

# பூஜை செய்ய ஜெயேந்திரருக்குத் தடை ஏன் என வக்கீல் நோட்டீஸ்

(சென்னை)

இராமேஸ்வரம் கோவிலுக்குள் ஜெயேந்திரர் பூஜை செய்ய அனுமதி மறுத்தது ஏன் என்று விளக்கம் கேட்டு தமிழக அரசுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.



ஜெயேந்திரர் சார்பாக அவரது வக்கீல் ஆர்யாசுத்வர்தன் தமிழக கலை மற்றும் கலாசாரதுறை செயலாளர், இந்து அறநிலையத் துறை கமிஷனர் ஆகியோருக்கு விளக்கம் கேட்டு நேற்று முன்தினம் ஒரு வக்கீல் நோட்டீஸ் அனுப்பி உள்ளார்.

ஜெயேந்திரருக்கு இந்தியா முழுவதும் பக்தர்கள் உள்ளனர். இவர் காஞ்சி மடத்தின் பீடாதிபதியாக உள்ளார். இதனால் இவருக்கு இந்து கோவில்களில் தனிமரியாதை வழங்கப்படுவது வழக்கம் . இது பல ஆண்டுகளாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் பழக்கமாகும்.

கடந்த ஜுலை மாதம் ஜெயேந்திரர் இராமேஸ்வரம் கோவிலுக்கு சென்றபோது கருவறைக்குள் நுழைய அதிகாரிகள் விடவில்லை.

இதுபற்றி விசாரித்தபோது இந்து அறநிலையத்துறை இணை இயக்குனர் இதற்கு அனுமதி தரமறுத்துள்ளார் எனத் தெரிவிககப்பட்டது.

சங்கர மடத்தில் இருந்துதான் இராமேஸ்வரம் கோவிலுக்கு முதல் நன்கொடை இந்த கோவிலுக்கு வழஙகப்படும். இந்த ஆண்டு மடத்தில் இருந்து இந்த கோவிலுக்கு அனுப்பிய ரூ1001ஐக் கூட அதிகாரிகள் திருப்பி அனுப்பிவிட்டனர். எனது கட்சிக் காரருக்கு கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் சிலர் தூண்டுதலின் பெயரில் இப்படி அதிகாரிகள் செய்கிறார்கள்.

ஆகவே ஜெயேந்திரரை கோவிலுக்குள நுழைய தடைசெய்ய அரசு உத்தரவு ஏதாவது இருந்தால் அதை உடனே வெளியிடவேண்டும. அப்படி ஏதாவது தடை உத்தரவு இல்லாவிட்டால் அவரை இராமேஸ்வரம் கோவிலுக்குள் நுழைய தடைவிதித்தது ஏன் என்று விளக்கம் அளிக்க வேண்டும் என அந்த நோட்டீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 22

பி.ஜே.ராஜய்யா

## சி.ஐ.ஏ.வலையில் குர்து போராளிகள்

ஜீப் வேகமாக வந்துகொண்டிருந்தது...

அதில் துணியால் கண்கள் கட்டப்பட்ட இரண்டுபேர் பின் பக்கமாய் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள். அவர்களின் இருபுறமும் இரண்டு போராளிகள் கையில் எந்திரத் துப்பாக்கியுடன்,

கண்கள் கட்டப்பட்ட நிலையிலிருந்த இருவரும் இந்தப் போராளிகளின் பகைவர் களோ, கைதிகளோ அல்ல.. விருந்தினர்கள்...!



குர்து விடுதலை முன்னணி தலைவர் பர்ஸானியுடன் சதாம்

போராளிகளின் தலைவரான முஸ்தபா பர்ஸானியைச் சந்தித்துப் பேசதாங்க ளாகவே விருப்பத்துடன் முன்வந்தவர்கள்.

இப்போது பர்ஸானியைச் சந்திப்பதற் குத்தான் போய்க் கொண்டிருந்தார்கள்.

போராளிகளின் முக்கிய தளபதிகள் தவிர வேறு எவருக்கும் தங்கள் தலைவ ரின் மறைவிடம் தெரிந்துவிடக்கூடாது என்பதில் உஷாராக இருந்த போராளிகள், தங்கள் விருந்தினர்களை கண்ணைக் கட்டியே அழைத்துச்சென்றார்கள்.

நிறைய வளைவு, சரிவுக்குப் பின் ஜீப் குலுங்கி நின்றது.

விருந்தினர்கள் இருவரும் கீழே இறக்கப்பட்டார்கள். அவர்கள் கண்களை மறைத்திருந்த கட்டு அவிழ்த்து விடப்பட்டது.

வெகுநேர இருட்டுக்குப்பின் வெளிச்சத்தைக்கண்ட விருந்தினர்கள், கண்ணைக் கசக்கிக்கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார்கள். அது என்ன இடம் என்பதை அவர் களால் யூகிக்க முடியவில்லை. வட ஈராக்கிலுள்ள சற்று தலை மறைவான பகுதி என்று மட்டும் தெரிந்தது.

போராளிகளின் முகாமுக்கு வெளியே நின்றுகொண்டிருந்த பர்ஸானி, அவர்களை வரவேற்றார். தங்களை சி.ஐ.ஏ.ஏஜெண்டுகள் என்று பர்ஸானியிடம் அறிமுகம் செய்து கொண்டார்கள் விருந்தினர்கள்.

“குர்து இன விடுதலைக்காக நீங்க நடத்துற போராட்டத்தைப் பத்தி துண்டு துண்டா நிறைய செய்திகள் கேள்விப்பட்டிருக்கோம். அதை முழுசா புரிஞ்சுக்கலா மேனு வந்தோம்...” என்று பீடிகை போட்டார்கள். சி.ஐ.ஏ.ஏஜெண்டுகள்.

“உட்காருங்க, பேசுவோம்”- நீள பெஞ்சை சுட்டிக்காட்டினார் பர்ஸானி.


ஏஜெண்டுகள் உட்கார்ந்தார்கள்.

பர்ஸானி ஆரம்பித்தார்.

“நாங்கள் அரேபியர்கள் இல்ல குர்து இனத்தைச் சேர்ந்தவங்க...”

ஆனா நீங்களும் முஸ்லிம்தானே?” -ஒரு ஏஜெண்ட் கேட்டார்.

“ஆமா! எங்க இனத்துல, ஏறக்குறைய எல்லோருமே முஸ்லிம்கள் தான். ஆனா, குர்து இனத்து முஸ்லிம்கள், ஈராக் ஜனத்தொகையில் 20 சதவிகிதம் நாங்கதான். நாங்க மைனாரிட்டி இனம் வட ஈராக்கில் காலம் காலமாய் வாழ்ந்துகிட்டிருக்கோம்...! “அரேபியர் எல்லோரும் ஓரின்ம்னு சொல்றாங்க அதுபோல குர்து எல்லோரும் ஓரினம்னு நாங்கள் சொல்றோம். அரேபியர் எல்லோரும் ஒரே தேசம்னு அவங்க சொல்ற மாதிரி நாங்களும் குர்துகளுக்கு-குர்து இனத்துக்கு ஒரு நாடு வேணும்னு சொல்றோம். இது தப்பா? சொல்லுங்க!” என்றார் பர்ஸானி.



“தப்பில்லை” என்று தலையைக் குலுக்கினார்கள் சி.ஐ.ஏ.ஏஜெண்டுகள்.

பர்ஸானி சிரித்தார். “இப்படித்தான் அந்தக் காலத்துல வெள்ளைக்காரங்களும் சொன்னாங்க”

“வெள்ளைக்காரங்களா?”

“ஆமா! முதல் உலகப்போர் ஆரம்பிச்சப்ப வெள்ளைக் காரங்க இங்கே வந்தாங்க. எங்க இனத் தலைவர்களைச் சந்திச்சுப் பேசினாங்க. “உங்க நாட்டை நாங்க பிடிக்கப் போறோம். எங்க ளுக்கு ஆதரவு குடுங்கன்னு கேட்டாங்க. அப்படி ஆதரவு குடுத்தா, வெள்ளைக்காரங்க ஆட்சி வந்ததும் குர்து இன மக்கள் நிறைய இருக்கிற பகுதி களையெல்லாம் ஒண்ணா இணைச்சு, உங்களுக் குன்னு ஒரு தனி நாடு உருவாக் கித் தர்றோம்னு சொன்னாங்க. வெள்ளைக்காரங்க பேச்சை எங்க ஆளுக அப்படியே நம்பி அவங்க ளுக்கு ஆதரவு குடுத்தாங்க. வெள்ளைக்காரங்களும் ஜெயிச்சு ஆட்சிக்கு வந்தாங்க. ஆனா எங்களுக்கு குடுத்த வாக்குறுதியைத் தான் காத்துல பறக்க விட்டுட்டாங்க” என்றார் பர்ஸானி. அவர் முகத்தில் வேதனையும், ஆத்திரமும் குழம்பித்தெரிந்தது.

“வெள்ளைக்காரங்களை விரட்டியடிச்ச பிறகு ஆட்சிக்கு வந்த எந்த அரசும் குர்து இன மக்களோட நியாயமான கோரிக்கையை ஏத்துக்கல. நாங்க தனிநாடு கேட்டு போராட்டம் நடத்தும் போதெல்லாம் இராணுவத்தை அனுப்பி எங்க ஜனங்களை கொன்று குவிச்சாங்க. பக்கர்-சதாம் ஆட்சியும் அதே பதையில்தான் போகுது. எங்க இனம் கௌரவமா தலைநிமிர்ந்து வாழனும்னா எங்களுக்குன்னு ஒரு தனி நாடு வேணும். அதை சாதிக்கிறதுக்காக தலைமுறை தலைமுறையா ஆயுதப் போராட் டம் நடத்திக்கிட்டேதான் இருப்போம்” என்றார் பர்ஸானி ஆவேசத்துடன்.

அவர் சொன்னதை முழுக்க ஏற்றுக்கொள்வது போல் தலையாட்டினார்கள் ஏஜெண்டுகள்.

“உங்க பக்கம்தான் நியாயம் இருக்கு. அதைப் பக்கரோ, சதாமோ எந்தக் காலத்துலயும் புரிஞ்சுக்கவே முடியாது. அவங்க ஆட்சியை எதிர்த்து நீங்க ஆயுதப் போராட்டம் நடத்துறது ரொம்பச் சரி. உங்க லட்சியம் நிறைவேற நாங்க ஏதாவது உதவி செய்யணுமா? சொல்லுங்க” ஏஜெண்டுகள் நைசாக வலைவிரித்தார்கள். பர்ஸானி முதலில் தயங்கினார். பிறகு, “எங்களுக்கு போராட கைகள் இருக்கு ஆனா, போதுமான அளவு ஆயுதம்தான் இல்லை” என்று உணர்ச்சிவசப்பட்டார்.

“கவலையை விடுங்க! ஆயுதம் நாங்க சப்ளை செய்யிறோம்” என்றார்கள் ஏஜெண்டுகள்.

அவ்வளவுதரான்! சி.ஐ.ஏ.விரித்தவலையில் விழுந்தார் பர்ஸானி நியாயமான போராட் டத்துக்காக அநியாயமான இடத்திலிருந்து உதவிபெற அவர் சம்மதித்தார்.

சி.ஐ.ஏ.ஏஜெண்டுகள் சொன்னார்கள்.

“ஈரான் மன்னர் ஷா எங்க ஆளு அவர்மூலம் உங்களுக்கு ரகசியமா நவீன ஆயுதங்கள் குடுக்கறோம். ஈராக் இராணுவத்தை எதிர்த்து துணிச்சலா சண்டை போடுங்க உங்க எல்லைக்கு உட்பட்ட எல்லாப் பகுதிகளையும் பிடிச்சு வச்சிக்கிட்டு போட்டி அரசாங்கம் நடத்துங்க. உங்க கிளர்ச்சியை ஒடுக்கமுடியாம பக்கரும், சதாம் உசேனும் ஆட்சியை விட்டு ஓடிருவாங்க. அதுக்கப்புறம் பாக்தாத்தில் நாங்க உட்காரவைக்கிற பொம்மை அரசு உங்களுக்கு முறைப்படி தனிநாடு குடுக்கும் சரியா...? விஷ் யூ ஆல் த பெஸ்ட்...”

(தொடரும்)

# நுகர்வோருக்கு தரமான தேயிலை

(கொழும்பு)

உணவு விவசாய ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் அரசிய லுக்கு இடையிலான குழுவின் தேயிலை தொடர்பான கூட்டம் இந் தோனேஷியாவின் பாலத்தீவில் கடந்த மாதம் 20ஆம், 22ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் நுகர்வோருக்கு சிறந்த தரத்திலான தேயிலையை வழங்குவது என்று இணக்கம் காணப்பட்டது.

தேயிலை ஏற்றுமதிக்கான குறைந்த பட்ச தராதரமாக ISO 3720 என்ற தரச்சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிபந் தனையை அமுல்செய்யுமாறு தெரிவித்த யோசனைகளுக்கு மாநாட்டில் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

கூடுதலான விநியோகத்தை நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச தராதரத்தில் மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு வேலை கொள்வோர் குழுவொன்றை நியமிப்பதற் கும் குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

தேயிலை ஆராய்ச்சியாளர்கள் கிருமி நாசினிகளை கூ[illegible]யள வில் களஞ்சியப்படுத்தி வைப்பது தொடர்பான பொதுவான உடன்படிக்கை ஒன்றைத் துரிதப்படுத்துவது குறித்து ஆராய்வதற்கு விரைவில் இந்தியாவில் கூடவுள்ளனர். (அ)

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

(கொழும்புத்துறை)

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் இவ் வருடம் மார்ச் மாதத்தில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்தப்பட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையின் பெறுபேறு கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப் பரீட்சையின் தரம் 1ற்கு 2 பரீட்சார்த்திகளும், தரம்-2ற்கு 7 பரீட்சார்த்திகளும், தரம்-3ற்கு 50 பரீட்சார்திகளுமாக மொத்தம் 59பேர் தோற்றியிருந்தனர்.

இவர்களுள் தரம்-1, தரம்-2ற்கான பரீட்சைகளில் ஒருவரும் சித்தியடையவில்லை. தரம்-3ற்கான பரீட்சைக்குத் தோற்றிய [illegible]0 பரீட்சார்த்திகளில் 18பேர் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர்.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மத்தியஸ் தர்களுக்கான பரீட்சையில் இம்முறை போன்று மோசமான பெறு பேறுகள் ஒருபொழுதும கிட்டவில்லை என்று யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இப் பரீட்சைக்கான ஆயத்த வகுப்புக்கள் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் மத் தியஸ்தர் சங்க பணிமனையில் நடைபெற்றதெனவும் அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த **FIFA** பரீட்சையில் சித்தியடைந்த கிளி பேட் அன்ரனிப்பிள்ளை எஸ்.ஆனோல்ட், ஆகியோா விரிவுரைகளை நடத் தியபோதிலும் இவற்றுக்கு வருகைதந்தோர் ஒருசிலரே என்றும் குறிப்பிட்டார்.

தரம் 3ற்கான பரீட்சையில் சித்தியடைந்தோர். ஏ.முகுந்தன் (சாவகச்சேரி), எம்.குகதாஸன் (சாவகச்சேரி), ஆர்.சிறிரமணண் (கொக்குவில்), ஆர்.அகிலநாயகம் (நாவாந்துறை), ஏ.அஜித்குமார் (நாவாந்துறை), பி.நியூட்டன் (நாவாந்துறை), எஸ்.சுரேந்தர் (இள வாலை), என்.பிரசாந்தன் (வட்டுக்கோட்டை), ரி.இளங்குமரன் (வரணி), எம்.மகிந்தன் (கரவெட்டி), எல்.குபேந்திரன் (பூநகரி), பி.சசிகரன் (நெல்லியடி), ரி.திவாகரன் (அல்வாய்), எம்.நவநேசன் (அல்வாய்), ரி.சதீஸ்குமார் (வல்வெட்டித்துறை), எஸ்.பாக்கிய ராஜா (கரவெட்டி), எஸ்.உதயன் (அல்வாய்), ஆர்.அருண்குமார் (கிளிநொச்சி). (அ)

# கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்க சர்வதேச கூட்டுறவு அமைப்பு நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தென் மாகாணங்களில் சுனாமி அனர்த்த[illegible] காரணமாக பாதிக்கப்பட்ட கூட்டுறவுச்சங்க கட்டடங்களை மீ[illegible] வும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சர்வதேச கூட்டுறவு அமைப்பு 141 மில்லியன் அமெரிக்க டொலர் களை இதற்கென வழங்கியுள்ளதாக கூட்டுறவு அமைச்சின் செய லாளர் எஸ்.மகாநந்தன் தெரிவித்துள்ளார்.

இந்நிதியின் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு 81மில் லியன் டொலரும் மேல் மாகாணததிற்கு 12 மில்லியன் டொலரும் தென் மாகாணத்திற்கு 48 மில்லியன் டொலரும் ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவக் கூட்டுறவுச்சங்கங் கள், சிக்கனக் கடன் கூட்டுறவுச்சங்கங்கள் என்பன மீளவும் புனர் நிர்மாணம் செய்யப்படும் என்றார். (அ-2)

# கலால் திணைக்களத்தின் தேடுதல் நடவடிக்கை

(கொழும்பு)

ஹோட்டல்களிலும் உணவு விடுதிகளிலும் சட்டவிரோத நட வடிக்கைகள் குறித்த தேடுதல்கள் தொடர்ந்தும் நடைபெறும் என்று கலால் திணைக்கள ஆணையாளர் பராக்கிரம ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி திணைக்களம் ஆரம்பித்த இந்தத் தேடு தல் நட்வடிக்கைகளில் கடந்த இரண்டு வார காலத்தில் 80 சட்ட விரோத சம்பவங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் காலப் பகுதியில் இது தொடர்பாக 50 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது என்றும் பொதுமக்கள் 24மணி நேர தொலைபேசிச் சேவை இலக்கமான 2300170 அல்லது 2303258 உடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை திணைக்களத் திற்கு தெரிவிக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-2)

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

வலம்புரி

# சந்தர்ப்பம் கருதி முடிவெடுக்கும் ஜனாதிபதி

இலங்கை பிரச்சினை விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலைப்பாட்டை எவரும் கூறிவிடமுடியாது அளவிற்கு நிலைமை உள்ளது.

விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியின் ஊடாக பயணத்தை மேற்கொள்வதற்கு படைத்தரப்பால் பாதுகாப்புத் தரமுடியாதென முதலில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலி உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பது பற்றி யுத்த நிறுத்த உடன்படிக்கையில் எதுவும் குறிப்பிடப்பட வில்லையென ஜெயந்த தனபால தெரிவித்திருந்தார்.

அரசியல் புலத்தில் ஆழ்ந்த அறிவுடைய அவர் எழுந்தமானமாக அப்படிக் கூறியிருக்க மாட்டார் என்பது உறுதி.

அப்படியாயின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசனைப்படியே அவர் கூறியிருக்க வேண்டும். யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்றபோது அரச கட்டுப்பாட்டுப் பகுதியின் ஊடாக பயணம் செய்யும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்குவது அரசின் தலையாய கடமை.

அரசு, விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க மறுக்கும் சந்தர்ப்பத்தில் தமது பாதுகாப்பிற்கான வழியை தாமே தேடிக் கொள்ளும் கட்டாயம் புலிகளுக்கு ஏற்படும்.

இத்தகையதோர் சூழ்நிலை ஏற்பட்டால் அதன் முடிபு யுத்தமாகவே இருக்கும். இந்த விடயம் சாதாரணமானவர்களுக்குக்கூட தெரிந்திருந்த போதிலும் ஜனாதிபதி அதைப் புரிந்து கொள்ளாமல் இருந்தது எதற்காக? என்ற குழப்பம் ஏற்பட்டது.

அரசு பாதுகாப்பு வழங்க மறுத்தால் பரவாயில்லை. எமது பாதுகாப்பை நாமே கவனித்துக்கொள்வோம் என்ற பதிலை விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விடவேண்டியதாயிற்று.

புலி உறுப்பினர்களுக்கு வழித்துணை வழங்க முடியாதென்ற அறிவித்தலின் போது பேசாதிருந்த சர்வதேச சமுகம் அரசியல்துறைப் பொறுப்பாளர் விடுத்த அறிக்கையால் விழித்துக் கொண்டது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியால் பயணிக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசின் கடைமையென சர்வதே நாடுகள் அரசிற்கு ஆலோசனை கூறின. சர்வதேசத்தின் ஆலோசனைக்கு பின்னர் உஷார் அடைந்த ஜனாதிபதி விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு வழித்துணை வழங்க சம்மதித்தார்.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பு விடயத்திலும், சர்வதேசத்தின் அழுத்தத்திற்கு தலை சாய்த்த ஜனாதிபதி சர்வதே சமுகத்தின் கருத்திற்கு மதிப் பளிக்கும் வகையில் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதற்கு முன்வந்தார்.

இதன் மூலம் ஐ.நா.சபைச் செயலாளர் கொபி அனானின் பாராட்டையும் பெற்றுக்கொண்டார். தற்போது புலி உறுப்பினர்களுக்கு வழித்துணை வழங்குவதிலும் சர்வதேசத்தின் கருத்திற்கு அமைவாகச் செயற்படும் அவர், எந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வைக் காண்பார் எனக் கூற முடியாதளவில் அவரின் செயற்பாடுகள் முன்னுக்குப் பின் முரணாக அமைந்துள்ளன.

# காணாமல் போனோர் தொடர்பான விசாரணை உரிய ஆவணங்களுடன் வருமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் 1996/1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்கள் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ள கீழ் காணும் நபர்கள் சம்பந்தமாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் காணாமல் போனோர் சம்பந்தமான விசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் விசாரணைக்காக கொழும்பிலிருந்து காணாமல் போனோர் சம்பந்தமான விசாரணைப் பிரிவினர் எதிர் வரும் 8ஆம் திகதி யாழ்.வரவுள்ளனர்.

கீழகுறிப்பிடப்படும் பெயரையுடைய காணாமல் போனோரின் பெற்றோர், பாதுகாவலர், முறைப்பாட்டுக்காரர் இவர்களில் எவரேனும் இடம்பெயர்நது அல்லது வெளி நாட்டில் வசிப்பவராயின் அவர்களது உறவினர்கள் கீழ் காணும் பொலிஸ் நிலையத்திற்கு குறிப்பிட்ட திகதியில் உரிய ஆவணங்களுடன் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

### சாவகச்சேரி பொலிஸ் நிலையம் (9,10ஆம் திகதி)

பத்மரூபன் ஞானசேகரம், அரியாலை தெற்கு, மீசாலை (கோவை .இல. 371), ரத்னம் கஜேந்திரன், இல-49/A நாகேந்திரபுரம், முறைப்பாட்டுக்காரர் என். ரத்னம் (கோ.இல-447), சத்தியவான் ரமேஷ், சாந்தகுகநாதன் மேல்பார்த்து, மிருசுவில், முறைப்பாட்டுக்காரர் கே.சதீஸ்வரன் (கோ.இல.491), சின்னத்தம்பி சசீகரன், முகவரி குறிப்பிடப்படவில்லை- கைது செய்யப்பட்ட இடம முல்லைத்தீவு (கோ.இல. 570), சிவலிங்கம் ரமேஸ்வரா ,இடைக்குறிச்சி வரணி, (கோ. இல.595), தம்பிதுரை துரைராஜா 02 வது ஒழுங்கை,முள்ளி வீதி அரக்கால் மடம் (கோ.இல.651), தேவசந்திரன் தேவன், ஆனந்த நகர், கிளிநொச்சி, (கோ.இல.692), திருநாவுக்கரசு சர்வேஸ்வரன், தனங்கிளப்பு, சாவகச்சேரி (கோ.இல. 704), ஸ்டனிஸ்டஸ் ஜேசுதாசன், வசந்தவாசகம், சுதுமலை கிழக்கு,சுதுமலை (கோ.இல.615), பூபாலசிங்கம் பிரபாகரன், கைதடி, தெற்கு கைதடி (கோ.இல.346), சுகுமாா பூபாலசிங்கம் மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி (கோ.இல.631)

### அச்சுவேலி பொலிஸ் நிலையம் (11,12ஆம் திகதி)

கார்த்திகேசு விஜயன், செருக்கம்புலம், பண்டத்தரிப்பு (கோ.இல.216), நாகமணி அண்ணராசா, புலுன்குட்டி, சங்கானை, பண்டத்தரிப்பு (கோ.இல.313),

பசுபதி தயானந்தன், செம்பியன்பற்று வடக்கு, யாழ்ப்பாணம், (கோ.இல.368), பொண்ணு அழகரத்னம்,பளை யாழ்ப்பாணம் (கோ.இல.382),ராசதுரை சுதாகரன், புலுன்குட்டி சங்கானை,பண்டத்தரிப்பு (கோ.இல. 424), S.பாலகுமார், கட்டப்பிராய் யாழ்ப்பாணம்- முறைப் பாட்டுக்காரர் G.D பிலோமினா (கோ.இல.459), S.சபேசன் ,அச்சுவேலி வடக்கு அச்சுவேலி முறைப்பாட்டுக் காரர்- புஷ்பமலர் (கோ.இல. 468), தர்மேஸ்வரன் காசிப்பிள்ளை சுதா பேக்கரி வீதி, உரும்பிராய் (கோ.இல.674), தேவேந்திரன் பாஸகரன், சுன்னாகம்,(கோ.இல.688),சிங்கராஜா விஜயகோபால், வித்தியாபுரம், அம்மான் கோவிலடி, சித்தன்கேணி (கோ. இல.557), சின்னத்தம்பி சயந்தன் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் (கோ. இல.574),செல்லத்துரை குணரத்னம், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் (கோ.இல.519).

### வல்வெட்டித்துறைபொலிஸ்நிலையம் (13,14ஆம் திகதி)

மகேஸ்வரன் மாணிக்கம், ராஜகிராமம்,கரவெட்டி மேற்கு கரவெட்டி, (கோ.இல.252), S.அம்பிகாவதி, எரகம் பத்தை,வல்வெட்டித்துறை, முறைப்பாட்டுக்காரா ஜெயந்தி அம்பிகாவதி(கோ.இல.458), தங்கராஜா குணசீலன், பூவக்கரை வியாபாரிமூலை பருத்தித்துறை முறைப் பாட்டுக்காரர்-G.கல்பனா(கோ. இல. 657), தர்மலிங்கம் சுவர்ணசீலன் ,வதிரி கரவெட்டி (கோ.இல.671), தில்லையம்பலம் யசோதரன் சுவர்தவாசா தும்பளை அளவெட்டி, முறைப் பாடடுக்காரர்-காநதீபன்-(கோ. இல.697), சின்னத்தம்பி துணுக்கன், திலீபன் செல்லத்துரை மேல்பார்த்து கரணவாய் மேற்கு,கரவெட்டி (கோ. இல.563),S.சிவாதரி,ஏழாலை மேற்கு ,ஏழாலை (கோ.இல. 466), S.செல்வரஞ்சன்,இல 25/7, கோப் பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்பாணம் (கோ.இல.471). (து)

# வடமராட்சி விவசாய அபிவிருத்திக்கு பட்டினிக்கெதிரான இயக்கம் உதவி

(பருத்தித்துறை)

வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய அபிவிருத்திக்கான உதவிகளைப் பட்டினிக்கு எதிரான இயக்கம் வழங்கவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டுப்பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள முடியாமல் அவலப்பட்டுக் கொண்டிருககும் விவசாயிகளின் விவசாய நிலங்களை உழுது பண்படுத்தி பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலமாக மாற்றி வழங்குவதற்கும் அவர்களுக்கு வேண்டிய விவசாய உள்ளீடுகளைவழங்கி உதவுவதற்கும் பட்டினிக்கு எதிரான இயக்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

புலோலி மேற்கு,புலோலி மத்தி, அல்வாய் வட மேற்கு, வியாபாரி மூலை, அல்வாய் மேற்கு, அல்வாய் வடமத்தி, பொலிகண்டி பகுதிகளின் விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

உலக உணவு நிறுவனம், உலக விஷன் நிறுவனம், கெயர் நிறுவனம் என்பனவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. யாழ். மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் அனுசரணையுடனேயே இவ்விவசாய உதவிகள வழங்கப்படும் என்றும் அறிவிககப்பட்டுள்ளது. (அ-52)

# தரம் உயர்த்தப்படும் யாழ் தொழில் நுட்பக் கல்லூரி

(கொழும்பு)

நாடடில் மாகாண ரீதியில் தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவி அவற்றை உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளாக மாற்றியமைக்க நிபுணத்துவ அபிவிருத்தி தொழில் மற்றும் தொழில் நுட்ப அபிவிருத்தி அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது.

தொழில்நுட்பக் கல்விக்காக அமெரிக்க நிதியுதவியாக வழங்கிய 27 மில்லியன் டொலர் இந்தத் திட்டதத்துக்கு செலவிடப்படவுள்ளது.


இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக மருதானை, யாழ்ப்பாணம், அம்பாறை, அநுராதபுரம், இரத்தினபுரி ஆகிய தொழில் நுட்பக் கல்லூரிகள் உயர்தொழில்நுட்பக் கல்லூரிகளாக மாற்றியமைக்கப்படவுள்ளன.

இந்தக் கல்லூரிகள் உயர்தொழில்நுட்பக் கல்லூரிகளாக மாற்றியமைக்கப்பட்ட பின்னர் அவறறின் மூலம் வழங்கப்படும் சான்றிதழகள் தேசிய மட்டத்தில் மேம்படுத்தப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தக் கல்லூரிகள் தரம் உயர்த்தப்பட்ட பின்னர் அவற்றில் வருடாந்தம் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க உளளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



எந்தக் கணமும் மாறுதல்களை ஏற்க நீ தயாராக இருக்காதவரை உன்னால் ஒரு போதும் உண்மையைக் காணமுடியாது. ஆனால் நிதானமாகவும் உறுதியாகவும் இருந்து உண்மையயைத் தேடுவதில் நீ நாட்டம் கொள்ள வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# பிரதமர் தலைமையில் அபிவிருத்தித் திட்டம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பிரதேச செயலாளர்களை உள்ளடக்கிய அபிவிருத்தித்திட்டமொன்று நாடளாவிய ாதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

கிராமிய மக்களுடன் பிரதேச செயலாளர்களுக்கு நெருங்கிய தொடர்புகள் இருப்பதால் இத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

பிரதேச செயலாளர்கள் தமக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை மீண்டும் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து அதனடிப்படையில் இநத திட்டம் மேற்கொள்ளப்படுவதாகத்தெரிகிறது. (து-2)

# அரச அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டங்கள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் விநாயகபுரம் முதலாம் பிரிவு மக்கள் திருக்கோயில் பிரதேச செயலர் பிரிவின் முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தியுள்ளார்கள்.

பிரதேச செயலாளருக்கு எதிராக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தமது பகுதி சுனாமியால் பாதிக்கப்படவில்லை என்று பிரகடனப்படுத்தியது தவறு என்றும் தமக்குரிய கொடுப்பனவுகள் இதனால் கிடைக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.


இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு இன்றேல் இந்த ஆர்பபாட்ட போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை, கல்முனை வீடமைப்பு அதிகாரி அதிகார சபைக் காரியாலயம் முன்பாகவும ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து வீடமைப்பு அதிகார சபைக்கு 2001 ஆம் ஆணடு தெரிவு செய்யப்பட்டு பின்னர் 2002 ஆம் ஆண்டு பதவி நீக்கப்பட்ட ஊழியர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். நியமிக்கக் கோரும் அமைச்சரவை தீர்மானத்தின்படி தங்களுக்கு மீள் நியமனம் வழங்குமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (து-9)

# இந்தியப் படையின் பிடியிலிருந்து இலங்கையை மீட்டவர் பிரபாகரனே!

## மட்டு. அரசியல்துறைப் பொறுப்பாளர் உரை



(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரிடம் சிங்கள மக்கள் கடமைப்பட்டவர்கள். எனவே அவர்கள் எமது தலைவரை மதிக்க வேண்டும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானம் தொடங்கிய நாளிலிருந்து இந்த நிமிடம்வரை சமாதானத்தைக் காப்பாற்றுவதற்காக இரத்தம் சிந்தியுள்ளோம், உயிர்த் தியாகம் செய்துள்ளோம்.

எங்களுக்கும் பொறுமை உண்டு எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இருந்தும் அது பயனற்றதாகவே காணப்படுகிறது.

சிங்கள மக்களிடம் நாங்கள் ஒன்றைச் சொல்கின்றோம். சிங்கள மக்கள் எங்களுக்கோ அல்லது நாங்கள் சிங்கள மக்களுக்கோ எதிரிகள் அல்ல.

'சிங்கள' ஆட்சியாளர்களும், அவர்களது படையினருமே எதிரிகளாக இருக்கின்றார்கள்.

1987 ஆம் ஆண்டில் இந்தியப் படை இங்கிருந்தபோது ஒட்டுமொத்த இலங்கைத் தீவுக்குமான விடுதலைப் போராட்டத்தை எமது தேசியத் தலைவர் தனித்து நின்று வெற்றிகரமாக நடத்திமுடித்தார் என்பதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

எனவே சிங்கள மக்கள் எமது தலைவருக்கு கடமைப்பட்டவர்களே! இவ்வாறு இளந்திரையன் தெரிவித்தார். (ந-4)



மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டில் கலந்துகொண்டு வண. சுமன தேரர் உரையாற்றுவதையும், அருகில் ஜோசப் பரராஜசிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## அமைதி முயற்சிகளிலிருந்து சொல்ஹெய்ம் தற்காலிக ஓய்வு

இலங்கைக்கான நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆறுவார காலத்திற்கு இலங்கையின் சமாதான முயற்சிகளிலிருந்து தற்காலிகமாக விலகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நோர்வேயின் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது.

எரிக்சொல்ஹெய்ம் தற்சமயம் நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சு ஆலோசகராகக் கடமையாற்றி வருகிறார். அவர் நோர்வேயின் முன்னாள் அரசாங்கத்தினால் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். எனினும் அந்நாட்டின் அரசாங்கம் மாற்றமடைந்தபோதும், எரிக் சொல்ஹெய்ம்மை புதிய அரசாங்கமும் இலங்கையின் சமாதானத் தூதுவராக ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## 'சேது' திட்டத்தை இலங்கை தடுக்காது

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டத்தை இந்திய அரசு முன்னெடுப்பதற்கு இலங்கை அரசு முட்டுக்கட்டையாக இருக்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்தின் பாதிப்புக்கள் குறித்து ஆராயும் மாநாடு, இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இம் மாநாட்டில் இலங்கைத் தரப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு கருத்துக்கூறியபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (ந4)

## மட்டு. தமிழர்கள் நால்வர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பட்டிருப்புப்பாலம் விசேட அதிரடிப்படை முன்னணி பொலிஸ் நிலையப் பிரதேசத்தில் நேற்றுக் காலை நான்கு தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

களுவாஞ்சிக்குடியிலிருந்து வெல்லாவெளி நோக்கி பயணம் செய்த வாகனத்தில் ஜெலிக்னைட் குச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கருங்கல் விற்பனையுடன் தொடர்புடைய இவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட வெல்லாவெளிப் பிரதேசத்திற்கு கல் உடைப்பதற்காக இவற்றைக் கொண்டுசென்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் நால்வரும் நேற்று மாலை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

பின்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

(ந-4)

## மின்சாரசபை ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையைக் கண்டித்தும், மின்சாரசபை மறுசீரமைப்பைக் கண்டித்தும் மின்சாரசபை ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தவுள்ளனர்.

இன்று நண்பகல் மின்சாரசபைத் தலைமையகத்தின் முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக மின்சாரசபை ஊழியர்சங்கம் மின்சக்தி, எரிசக்தி அமைச்சருக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. (ந-4)

## ஊர்காவல் படைவீரர் சுட்டுக்கொலை

பொலநறுவை வெலிக்கந்தை நகரில் நேற்றுப் பிற்பகல் முன்னாள் ஊர்காவல் படைவீரர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த நாலக்க சம்பத்குமார என்பவரே கொல்லப்பட்டவராவார். தனது மனைவியுடன் வெலிக்கந்தை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு ஒன்றைச் செய்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்தபோது, பொலிஸ் நிலையத்திற்கு சற்றுத் தொலைவில் வைத்து அவர் சுடப்பட்டார்.

மோட்டார் சைக்கிளிலில் வந்த இரண்டு நபர்கள் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

படுகாயங்களுக்கு உள்ளான அவர் வெலிகந்தை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது அங்கு உயிரிழந்துள்ளார். (ந-4)

## முத்தலிப்பின்...

யாகியுள்ளன.

**இவர்களை விசாரணை செய்தபோதே தடுப்புக் காவலிலுள்ள ராஜனின் சிங்களத் தொடர்புகள் குறித்து மேலதிக விபரங்கள் கிடைத்துள்ளன. இதுவரை பெறப்பட்ட விபரங்களை விட மிகவும் பெறுமதிவாய்ந்தவையாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்த விசாரணைகளிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு உளவு பார்த்த பெருமளவான சிங்களவர்களின் பெயர்கள் கிடைத்துள்ளன. இவர்களில் சமூகத்தில் முக்கிய பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களும் உண்டு.**

**சிலர் அரச மற்றும் தனியார் நிறுவனங் களில் பணியாற்றிக் கொண்டு உளவுபார்த்து வந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் பெருமளவு பணத்தை வழங்கியதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தனது செய்தியில் தெரிவித்துள்ளது. (ந-4)**

## மீன்பாடும் தேன் நாட்டில்.....

நிகழ்வில் கரும்புலி மேஜர் சிறைவாசன் உட்பட மூன்று மாவீரர்களின் தந்தையான இளையதம்பி நாராயணபிள்ளை தமிழீழத் தேசியக்கொடியினை ஏற்றினார். மாவட்ட அரசாங்க அதிபர் வேல்முருகு சண்முகம் ஈகச்சுடர் ஏற்றினார். விடுதலைப் புலிகளின் மட்டு. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பி.அரியநேந்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பி.கனகசபை, தங்கேஸ்வரி கதிர்காமர் மற்றும் சர்வமத குருமார்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

இந்த மாநாட்டை முன்னிட்டு குறிப்பிட்ட மைதானத்தையும், அதனைச் சுற்றிவரவுள்ள பிரதேசத்தையும் அண்மித்து விசேட பொலிஸ் பாதுபாப்பு எற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

துவிச்சக்கரவண்டிகள் உட்பட எந்தவொரு வாகனங்களும் மைதானத்திற்குள் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படவில்லை. இறுதியில் தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனம் வாசிக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட மக்களின் ஏகோபித்த அங்கிகாரம் பெறப்பட்டது. (ந-4)


**யாழ்ப்பாணம் மாநகர சபை**

**பொதுசன நூலகம்**

**தனியார் பாதுகாப்புச் சேவைக்கான விண்ணப்பம்**

**யாழ். பொதுசன நூலகத்திற்கு 01.09.2005 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு தினமும் 24 மணிநேரம் பாதுகாப்பு சேவை வழங்கக்கூடிய இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்த தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

**பகல் 03 பேரும், இரவு 03 பேரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவேண்டும். தெரிவுசெய்யப்படும் நிறுவனம் மாநகரசபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதுடன், சித்திபெறும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்யும்போது ரூபா 100,000/= பெறுமதியான பிணை முறி ஒன்று வழங்கல்வேண்டும்.**

**மாநகரசபையில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவம் ரூபா 100/= (வற்வரி நீங்கலாக) உம், மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் ரூபா 500/= உம் செலுத்தி மாநகரசபை அலுவலகத்தில் 15.08.2005 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் பெறப்பட்ட பின்னர் விண்ணப்பிக்காவிடின் வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.**

**விண்ணப்பங்கள் யாவும் 25.08.2005ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் மாநகர ஆணையாளர், மாநகரசபை யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் அல்லது நேரடியாகக் கையளிக்கப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் 25.08.2005ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு திறக்கப்படும். அப்போது விரும்பிய விண்ணப்பக்காரர் பார்வையிடலாம்.**

**கலாநிதி க.குணராசா**

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
02.08.2005 (C/1500)











இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.